ஸ்ரீ ராமாநுஜன் 169.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 15	1963௵ ஜனவரிமீ சுபக்ருத்௵ தைமீ	ஸஞ்சிகை 1

திருவாய்மொழி நூற்றந்தாதி-58

பொன்னுலகு பூமியெல்லாம் புள்ளினங்கட்கே வழங்கி *
என்னிடரை மாலுக் கியம்புமென*—மன்னுதிரு
நாடு முதல்தூது நலகிவிடும் மாறனையே *
நீடுலகீர்! போய்வணங்கும் நீர்.

பொன் உலகு பூமி எல்லாம்	நித்யவிபூதி லீலாவிபூதியாகிய எல்லாவற்றையும்	மன்னு திருநாடு முதல்	நித்யவைகுண்டம் முதலான இடங்களில்
புள் இனங்கட்கே வழங்கி	பறவைக்கணங்களுக்கே கொடுப்பதாகச்சொல்லி	தூது நல்கி விடும்	பக்ஷிகளை தூதாக விரும்பிப்போக விட்டருளின
என் இடரை மாலுக்கு இயம்பும் என	(நீங்கள்) எனது துயரை எம்பெருமானிடம் சென்று சொல்லுங்கோளென்று	மாறனையே நீடு உலகீர்	ஆழ்வாரையே பெரிய உலகத்தவர்களே!
		நீர் போய் வணங்கும்	நீங்கள் சென்று வணங்குங்கள்.

* பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ * என்று தொடங்குந் திருவாய்மொழியில், புள்ளினங்களைநோக்கி 'உங்களுக்கு உபயவிபூதியையும் வழங்குகிறேன், திருநாட்டிலோ அந்தர்யாமித்வத்திலோ எங்கேயாவது எம்பெருமானைக்கண்டு பிடித்து நீங்கள் எனது பிரிவாற்றாமையை அப்பெருமானுக்கு அறிவிக்கவேணும்' என்றுசொல்லித் தூதுவிட்ட ஆழ்வாரையே அனைவரும் வணங்கவேணுமென்றாயிற்று.

* பொன்னுலகாளீரோ வென்னும் திருவாய்மொழிக்கு இரண்டுபடியாக ஸங்கதியருளிச் செய்வர்கள் பூருவர்கள். கீழ்த் திருவாய்மொழியில் * அனைத்துலகு முடைய அரவிந்தலோசனனைத் தினைத்தனையும் விடாள் * என்றதை நோக்குங்கால், பராங்குசநாயகிக்குத் திருக்கோளூரெம்பெருமானோடே ஸம்ச்லேஷம் விளைந்ததாகத் தெரிகின்றது; * திருக்கோளூர்க்கே ஒல்கியொல்கி நடந்து எங்ஙனே புகுங்கொலோசிந்தே* என்றதை நோக்குங்கால், பராங்குசநாயகி திருக்கோளூர் சென்று சேர்ந்திருக்கமாட்டாளென்றதாகத் தெரிகின்றது. சென்று சேர்ந்து ஸம்ச்லேஷம் விளைந்ததாகக் கொண்டால், ஸம்ச்லேஷத்திற்கு அடுத்தபடி விச்லேஷம் ப்ராப்தமாகையாலே பிரிவு உண்டாகி ஆற்றாமையாலே அவனைக் குறித்துச் சில பக்ஷிகளைத் தூதுவிடுகிறாள் இத்திருவாய்மொழியில் என்று ஸங்கதியாகிறது. திருக்கோளூர்க்குச்சென்று சேரவேயில்லையென்று கொண்டாலும் தூதுவிடுகைக்கு எளிதாகவே ப்ரஸக்திபுண்டாயிற்றதாகிறது.

ஆறுயிரப்படி ஸ்ரீஸூக்தி காண்மின்:—"இப்படி திருக்கோளூரிலே யெழுந்தருளின பிராட்டியோடுள்ள சிரகால ஸம்ச்லேஷ ஜநித அநவதிகாநந்த மஹார்ணவாந்தர் நிமக்நனான எம்பெருமான் அந்த ஆனந்த வெள்ளம் தனக்கு அஸாத்ம்யமானவாறே அது ஸாத்மிக்கைக்காக விச்லேஷித்து நெடுங்கால மெழுந்தருளாதிருந்தவாறே தத்விச்லேஷத்தாலே அத்யந்தம் அவஸந்நையான பிராட்டி தன்னுடையவாற்றாமையாலே அவனைக் குறித்துச் சில பக்ஷிகளைத் தூதாக விடுகிறாளென்றுமாம். திருக்கோளூரிலே போய்ப் புக வேணுமென்று புறப்பட்ட இப்பிராட்டி தன்னுடைய அவஸாதத்தாலே பின்னைப் போக க்ஷமையன்றியே அங்கே உத்யானத்திலேயிருந்து எம்பெருமானைக் குறித்து தூதப்ரேஷணம் பண்ணுகிறாளென்றுமாம்."

ஈட்டு ஸ்ரீஸூக்தி:—"பன்னிரண்டாண்டு தண்ணீர்த் தாரும்பறக் கலந்து பிரிந்த பிராட்டியைப் போலே அங்கே புக்கு நெடுங்காலம் அவனையநுபவித்துப் பிரிந்து தூது விடுகிறாள் என்று பிள்ளான். புறப்பட்டவள் முடியப்போக மாட்டாதே நகரோபவனத்திலே கிடந்து தூதுவிடுகிறாள் என்று பட்டரருளிச் செய்யும்படி."

கீழே * துவளில் மாமணிமாடமென்கிற திருவாய்மொழியாதியாக இத்திருவாய்மொழியளவும் நாற்பது பாசுரங்களும் ஸ்திரீபாவனை நெடுக அநுவர்த்தித்தே வருகின்றமை உணர்க. தோழிபாசுரமாக ஒருபதிகமும், தாய்பாசுரமாக இரண்டுபதிகங்களும் தலைவி பாசுரமாக இப்பதிகமும்.

* சில பறவைகளை எம்பெருமான்பக்கலிலே தூதுபோக விடுகையாகிற விது—சில பாகவதர்களைக் குறித்துப் புருஷகாரக்ருத்யம் செய்யும்படி பிரார்த்திக்கையாம். பகவத் விஷயத்தில் அந்வயிப்பிக்குமவர்களைப் பக்ஷிகளாக ப்ரதிபத்திபண்ணுகிறதென்று ஸ்வாபதேசார்த்த மறிவது. பறவையானது இரண்டு சிறகுகளாலே உயர்கதியை அடையுமா போலே ஞானம் அனுஷ்டான மென்ற இரண்டினால் உயர்கதியை அடைகின்றவர்களான மஹான்களே பக்ஷிகளாக மறைத்துப் பேசப்படுகின்றார்கள். ஆசார்யர்கள், ஸப்ரஹ்மசாரிகள் [உடன் கல்வி பயின்றவர்கள்], புத்திரர்கள், சிஷ்யர்கள் ஆகிய இவர்கள் தூதுவிடப்படுகின்றவர்களாக ஆங்காங்கு ஸந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு கொள்க.

திருவாய்மொழியாயிரத்திலும் தூதுவிடும் பதிகங்கள் நான்கில் இது மூன்றாவது. எம்பெருமானுடைய வியூஹநிலையை நோக்கி [அஞ்சிறைய மடநாரையில்] முதல் தூது விடப்பட்டதென்றும், விபவாவதாரத்தை நோக்கி [வைகல் பூங்கழிவாயில்] இரண்டாந்தூது விடப்பட்டதென்றும், பரத்வத்தையும் அந்தர்யாமித்வத்தையும் நோக்கி [இப்பதிகத்தினால்] மூன்றாந் தூது விடப்படுகிற தென்றும் ஆசாரியர்கள் நிரூபித்துக் காட்டியருள்வர்கள். ஆசார்யஹ்ருதயத்தில் "தம்பிழையும் சிறந்த செல்வமும்" இத்யாதியாகவுள்ள சூர்ணையும் அவ்விடத்து வியாக்கியானமும் இங்கு உணரத்தக்கன.

இந்தத்தூதில் *தன் மன்னுநீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்* என்று ஆச்ரிதரோடு ஒரு நீராகக் கலந்திருக்கையாகிற ஐகரஸ்யமென்னும் குணம் வெளியிடப்படுகிறது. இப்பதிகத்தில் * மூன்னுலகங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன் கண்ணன் என்னலங்கொண்ட பிரான் தனக்கு * என்கிற பாசுரம் உயிராயிருக்கும். எம்பெருமான் அடியார்களோடு ஒரு நீராகக் கலந்து பரிமாறுகையாகிற ஐகரஸ்ய முடையனானாலும் தான்

படைத்த ஜகத்தின் பரப்பை ரக்ஷிக்கிற பராக்காலே அந்த ஐகாஸ்யத்தை மறந்து என்னை நினையாதிருக்கிறனத்தனை; அத்தையறிவிக்கவே, [அதாவது *தன் மன்னுநீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றிநல்கான் * என்று உறுதி கொண்டிருக்கைக்கு உறுப்பானவரல்லீரோ நீர் என்று உணர்த்தவே] கடுக வந்து சேர்வனென்று தூது விடப்படுகிறது.

இதில் *வானவர்கோனைக் கண்டு யாமிதுவோ தக்கவாறென்னவேண்டும்* என்ற பாசுரத்தையும் * எங்குச் சென்றாகிலுங் கண்டு இதுவோ தக்கவாறென்மின்* என்கிற பாசுரத்தையும் உயிராகக் கொண்டு இத்திருவாய்மொழி—பரத்வத்திலும் அந்தர்யாமித்வத்திலும் தூதுவிட்டபடியாமென்பர். ... ... *

புத்தாண்டு பிறப்பு.

அன்பிற்சிறந்த ஆரியர்காள்! நமது ஸ்ரீராமாநுஜன் பதினான்கு பிராயங்களை இனிது கடத்தி இப்போது பதினைந்தாவது பிராயத்தில் அடியிடுகின்றது. இதுகாறும் இதனை அபிநிவேசத்தோடு ஆதரித்த நீங்கள் இனியும் அங்ஙனமே ஆதரிப்பீர்களென்பதில் ஐயமேது? ஆயினும் பிரார்த்திக்க வேண்டுவது நமது கடமையாதலால் முன்போலவும் முன்னிற்காட்டிலும் அதிகமாகவும் ஆதரிக்கவேணுமென்று வினயமுடன் வேண்டிக்கொள்ளுகிறோம். ஸர்வஜ்ஞனான எம்பெருமானும் நமது வேண்டுகோட் பாசுரங்களைக் கேட்டு உவந்தே காரியஞ்செய்தருள்கின்றானென்னும்போது உங்கள் பக்கலிலே வேண்டிக்கொள்ள வேண்டியதும் முறைமையன்றோ.

ப்ராஸங்கிகமாக மற்றுஞ்சில விஷயங்களையும் விஜ்ஞாபிக்க ப்ராப்தமாகிறது. நம்முடைய க்ரந்தமாலா கார்யாலயத்திலிருந்து ஸ்ரீராமாநுஜனென்னும் இத்தமிழ்ப்பத்திரிகை போலவே வைதிகமனோஹரா என்னும் ஸம்ஸ்க்ருத பத்ரிகையும், ஸ்ரீராமாநுஜபத்ரிக என்னும் தெலுங்கு பத்ரிகையும் நெடுநாளாகவே மாதந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கின்றனவென்பதை அறியாதார் மிகச்சிலரே யிருக்கக்கூடும். வைதிகமனோஹராவில் ஸம்ஸ்க்ருத பாஷாவியாஸங்கள் மட்டுமன்றியே ஹிந்தீபாஷாவியாஸங்களும் கலந்து வெளிவருகின்றன. தெலுங்கு பத்ரிகையில் சிலகாலமாக திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களையே வெளியிட்டு வருகிறோம். இதில் சென்றமாதத்தோடு முதலாயிரம் பூர்த்தியாகி வெளிவந்துவிட்டது. பாசுரங்களைப் பூர்த்தியாக அச்சிட்டு ப்ரதிபதார்த்தடீகையும் தாத்பர்யஸாரமும் தெலுங்கு பாஷையில் பதிப்பித்து வருகிறோம். இகழும் தைமாதத்திலிருந்து திருவாய்மொழிடீகை தொடக்கமாகிறது. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் ஜீவாதுவான திவ்யப்ரபந்தார்த்தரளங்களைத் தெலுங்கு நாட்டினரும் இழவாமல் அநுபவிக்கவேணுமென்கிற குதூஹலத்தினால் இஃது அச்சிடப்பட்டு வருகிறது. நாம் தமிழில் திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகை எழுதினதுபோல் விரிவாகவன்றிக்கே ஸாரமாகவும் சுருக்கமாகவும் எழுதப்படுகிறது இந்த தெலுங்கு டீகை. திவ்யப்ரபந்தரஸாநுபோக்தாக்களுக்கு இது பர்யாப்தமேயாகும்.

இந்த தெலுங்குப் பதிப்பு தனித்தனிப் புத்தகமாக விற்பனை செய்யப்படுவதில்லை. மொத்தம் 30 ரூ. முன்பணமாகச் செலுத்துபவர்களுக்கு நாலாயிரத்திற்கும் பூர்த்தியாக டீகை மாதந்தோறும் நூறு நூறு பாசுரம் வீதம் அனுப்பப்பட்டுவரும். ஏற்கெனவே அச்சாகியுள்ள முதலாயிரம் டீகையும் உடனே பெறுவிக்கப்படும்.

ஆந்திரதேசத்தவர்கள் திவ்யப்பிரபந்தார்த்தங்களை இழவாதபடிக்கு இங்ஙனம் தெலுங்கு பதிப்பு நடத்திவருவதுபோலவே வட இந்தியாவிலுள்ள பக்தர்களும் இதை இழவாதபடிக்கு ஸம்ஸ்க்ருத பாஷையிலும் ஹிந்தீபாஷையிலும் திவ்யப்ரபந்த வியாக்கியானங்கள் தேவநாகரலிபியில் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றனவென்பது உலகம் பரவியேயிருக்கின்றது. இவ்விரண்டு பாஷைகளிலும் முதலாயிரம் பூர்த்தியாகி வெளிவந்துவிட்டது. ஸம்ஸ்க்ருத பாஷையில் இரண்டு ஸம்புடமும், ஹிந்தீபாஷையில் இரண்டு ஸம்புடமும் ஆக நான்கு ஸம்புடங்கள் வெளிவந்துவிட்டன. இவை சிறந்த பயிண்டுடன் கிடைக்கும். ஸம்ஸ்க்ருத பாகத்தின் விலை (இரண்டு ஸம்புடங்கட்கு) 15 ரூ. ஹிந்தீபாகத்தின் விலை (இரண்டு ஸம்புடங்கட்கு) 16 ரூ.

அந்தந்த பாஷைகளில் அதிகாரிகளான பக்த பாகவதர்கள் இவற்றையெல்லாம் உவப்புடன் ஆதரிக்கவேணுமென்று கேட்டுக்கொண்டு நிற்கிறோம். கூடியமட்டில் ஆப்தர்களுக்குத் தெரிவித்து ப்ரசாரமும் செய்ய ப்ரார்த்தனை. ... . *

ஒரு முக்கியவார்த்தை.

ஸ்ரீராமாநுஜன் நெ. 168. மார்கழிமாதத்தில் வெளியிடப்பட்டது. அப்போது நாம் சென்னையிலிருந்தோம். காஞ்சியில் இருந்த கார்யஸ்தர் கவனித்தே அனுப்பிருக்கின்றார். ஆயினும் சில விலாஸங்களுக்கு அனுப்பத்தவறிவிட்டதுபோல் தெரிகிறது. எமக்குக் கிடைக்கவில்லையென்று தெரிவித்த சில சந்தாதாரர்களுக்கு அனுப்பினோம். அப்படி கிடைக்கப்பெறாதவர்கள் இன்னுஞ் சிலர் இருந்தால் உடனே தெரிவிக்கக் கோருகிறோம்.

திருநாராயணபுரத்தில் விசேஷம்.

மேல்கோட்டை என்று வழங்கப்படும் திருநாராயணபுரத்தில், நிகழும் தைமாதத்தின் 4. 5. 6 தேதிகளில் மிகச்சிறந்த விசேஷமொன்று நடைபெற்றது. நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்த க்ரந்தங்களில் வேதாந்தவாதாவளி யென்னும் நூல்மாலையைப் பற்றிக் கேள்விப்படாத வைணவர்கள் விசேஷமாக இருக்கமாட்டார்கள். வித்வத்கோஷ்டிகளில் மிகப்பிரஸித்தமான க்ரந்தமாலை இது. மைஸூர் அனந்தாழ்வார் ஸ்வாமி யென்றும் பண்டயம் அனந்தாழ்வார் ஸ்வாமி யென்றும் ப்ரக்க்யாதராய் எழுந்தருளியிருந்த மஹாவித்வத்ஸார்வபௌமர் சதுச்சாஸ்திரங்களிலும் அலங்கார ஸாஹித்யாதிகளிலும் கரைகண்டவர். விசேஷித்து நியாயவேதாந்தங்கள் இந்த ஸ்வாமிக்கு அஸாதாரணச் செல்வமெனத்தகும். இந்த மஹான் நாற்பது ஸம்வத்ஸரம் மட்டுமே இவ்விபூதியை அலங்கரித்தெழுந்தருளியிருந்தார். அவர் திருநாட்டுக்கெழுந்தருளி ஒரு நூறாண்டு பூர்த்தியாயிற்றிப்போது.

அந்த ஸ்வாமியின் பௌத்திரரான ஸ்ரீ. உ. வே. M. A. ஸ்ரீனிவாஸன் என்று ப்ரஸித்தரான மஹாபுருஷர் சிறந்த உத்யோக பதவிகளை வஹித்து இப்போது விச்ராந்தராயிருப்பவர். இவர் ஸரஸ்வதீகடாக்ஷத்தையும் லக்ஷ்மீகடாக்ஷத்தையும் விசேஷித்துப் பெற்றவர். ஆஸ்திகர்களில் தலைவருமாவர். இவர் தம் பிதாமஹரான அனந்தாழ்வார் ஸ்வாமியின் பெருமைகளை நன்குணர்ந்து அம்மஹானுடைய அப்ரதிம கீர்த்திக்கு நித்யஸ்மாரகமாகத் திருநாராயணபுரத்தில் ஒரு மஹாமண்டபம் ஏற்படுத்த மனோரதித்து ஏழெட்டாயிரம் ரூபா

செலவில் மிகச்சிறிதும் மிகப்பெரிதுமன்றியே ஒரு திருமண்டபம் அமைத்தார். அதில் மூன்றுநாளைய சடங்குகள் சிறப்பாக நடத்தப்பட்டன. முதல் நாளில் வாஸ்துசாந்தி ஹோமாதிகள் நடந்தன. இரண்டாநாளில் திருநாராயணப்பெருமாளெழுந்தருளித் தீர்த்த விநியோகாதி கோஷ்டிகள் நடைபெற்றன. மூன்றுநாளில் வித்வத்ஸதஸ்ஸு நடத்திவைக்கப்பட்டது. இதற்காக நமக்கு ஆஹ்வானம் வந்திருந்தபடியால் ஸதஸ்ஸு நடந்தவன்று மட்டும் போயிருந்து கூடியிருந்து குளிர்ந்துவந்தோம்.

ஸதஸ்ஸின் வரலாற்றைப்பற்றிச் சிறிது தெரிவிக்க விரும்புகிறோம். தைமீ 6௳ அன்று மாலை 4-மணிமுதல் இரவு 8-மணி வரை ஸதஸ்ஸு நடந்தேறியது. திருநாராயணபுரத்திலேயே ஸ்திரவாஸமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. எதிராஜ ஜீயர்ஸ்வாமிகள் அக்ராஸனம் வஹித்தருளினார்கள். மைஸூரிலிருந்தும் பெங்களூரிலிருந்தும் சில வித்வான்களும் பெரியார்களும் எழுந்தருளியிருந்தார்கள். உள்ளூர் வித்வான்களும் உபஸ்திதர்களாயிருந்தார்கள். அக்ராஸநாதிபதி ஸ்வாமியின் கம்பீரமான முன்னுரை முடிவு பெற்றவுடன் முன்னம் ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷண க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி தாம் இயற்றிய சில சுலோகங்களை வாசித்து ஸதஸ்ஸைத் தொடங்கிவைத்தார். பிறகு அவ்வூர் ஸம்ஸ்க்ருத காலெஜ் ப்ரின்ஸிபால் ஸ்ரீ உவே. வித்வான் மண்டயம் ஆழ்வார்ஸ்வாமி அனந்தாழ்வார் ஸ்வாமியின் வித்யாப்ரபாவத்தைப்பற்றிப் பேசினார். பிறகு ஸ்ரீ உ. வே. வித்வான், ஸ்ரீரங்கம் ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. நியாயவித்வான், எம்பார் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி, மைஸூரிலிருந்து வந்திருந்த மீமாம்ஸாசிரோமணி E. S. வரதாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. வேதாந்தவித்வான் சேஷாசார்யஸ்வாமி முதலானவர்கள் அனந்தாழ்வாருடைய ப்ரஜ்ஞாப்ரகர்ஷத்தையும் மேதாவிலாஸத்தையும் பற்றியே சிறப்பாகப் பேசினார்கள்.

பிறகு அக்ராஸனாதிபதிகளான ஸ்ரீ ஜீயர்ஸ்வாமிகள் அடியேனும் ஏதாவது பேசவேணுமென்று நியமித்தருள, அடியேனும் சிறிதுபேசி ஸத்தைபெற நேர்ந்தது. அடியேனுடைய இளமையில், காஞ்சீபுரத்திற்கடுத்த மாமண்டூரில் ஸ்ரீமத் குரவி விஜயராகவாசாரியர் ஸ்வாமி யென்றொரு வித்வான் எழுந்தருளியிருந்தார். அவர் எப்போதும் 'அழகிய மணவாளா!' என்று கர்ணச்ராவ்யமாக உரக்க உரைத்துக்கொண்டிருப்பாராதலால் அந்த ஸ்வாமிக்கு அழகிய மணவாளா என்றே யாவருமறிந்த திருநாமம். அவர் (ப்ரஸ்துத) அனந்தாழ்வார் ஸ்வாமியின் அந்தேவாஸிகளில் ஒருவர். அவர் காஞ்சியிலேயே பெரும்பாலும் ஸ்ரீஜகத்குரு காதிஸ்வாமி திருமாளிகையில் எழுந்தருளியிருப்பர். அப்போது அடியேன் ஊநஷோடசவர்ஷ: என்னும் படி யிருந்தவன். அக்கிழவர் அனந்தாழ்வார் ஸ்வாமியின் பெருமைகளை அடிக்கடி ஸாதித்துக் கொண்டிருப்பர். அடியேன் அவரிடம் கேட்ட வரலாறுகளை நெடுநாளைக்கு முன்னமே அடியேன் நடத்திவந்த ப்ரஹ்மவித்யா பத்ரிகையில் எழுதி வெளியிட்டிருந்தேன். அது 27—3—1951ல் வெளியிடப்பட்ட அடியேனுடைய ஷஷ்டியப்தபூர்த்தி நினைவுமலரிலும் வெளியிடப் பட்டிருக்கின்றது. அதை இங்குப் பதிப் பிக்கிறேன்;

ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை மண்டயம் அனந்தாழ்வார் ஸ்வாமி வைபவம்.

இந்த மஹான் [கி. பி. 1822-ஹு ஏப்ரல் மாதத்தில்] சகாப்தம் 1745, ஸ்வபாநு ஸம்வத்ஸரம் பங்குனித் திங்களில் ஆச்லேஷா நக்ஷத்திரத்தில் மண்டயத்தில் ஜனித்து திரு

நாராயணபுரத்தில் ஸ்வீகாரம் வந்தவர். இவர் ஆதிசேஷனுடைய அநுக்ரஹத்தினால் அவதரித்தாரென்றும் ஆனது பற்றியே ஆதிசேஷனுடைய திருநாமம் இவர்க்கு இடப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். ஜ்யோதிஷ்மதீலதையின் தைலம் உண்பித்து மேதையின் அபிவிருத்தி செய்விக்கப் பெற்றவரிவர் என்றும் கூறுகிறார்கள். மைஸூரில் ஸ்ரீ கூளீபாளாசார்யரிடத்தில் இவர் சாஸ்த்ரங்கள் பயின்றார். தமது ஜநகபிதாவாகிய ஸ்ரீ. மஹாபாஷ்ய சிங்கராசாரியர் ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதி க்ரந்தங்களை அதிகரித்தார். மைஸூர் இலாகாவைச் சேர்ந்த 'ச்ரவண பௌள கொளா' என்னுமிடத்திற்கு அருகிலுள்ள ஒரு ஜைந மடத்தில் அந்த மடாதிபதிக்குப் பாடப்ரவசநம் செய்யும்பொருட்டு இவர் அழைக்கப்பட்டு எழுந்தருளியிருந்தார். ப்ரஹ்மஸூரி பண்டிதரென்கிற அந்த மடாதிபதிக்கு இவர் மூன்று வருஷ காலம் ஸாஹித்ய சாஸ்த்ர பாடங்கள் கற்பித்துக் கொண்டிருந்தார். அப்போது அவ்விடத்துப் புஸ்தகசாலையிலிருந்த ஸௌகத, ஆர்ஹத மதக்ரந்தங்களையெல்லாம் நன்கு ஆராய்ச்சி செய்ய இவர்க்கு அவகாசம் ஏற்பட்டு அவற்றிலும் நிரம்பிய நைபுண்யம் பெற்றார்.

இவருடைய பாண்டித்யப்ரஸித்தி மிகவும் ஓங்கி வளர்ந்தது. மைஸூரில் பரகால மடாதிபதியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ப்ரஹ்ம தந்த்ரஸ்வாமிகள் ஒருகால் திருநாராயணபுர மஹோத்ஸவத்திற்கு எழுந்தருளியிருந்து இவருடைய ஒப்புயர்வற்ற வைதுஷ்யத்தைக் கடாக்ஷித்து வியந்து இவரைத் தமது மடத்தில் ஆஸ்தாந பண்டிதாக்ரேஸரராக வரித்துக்கொண்டார். அப்போது இவர்க்கு வயது 27. அப்போதே இவர் சதுச்சாஸ்த்ர பாரங்கதராய் வாக்யார்த்தம் சொல்லுவதில் ஒப்பற்றவராய் க்ரந்தங்கள் எழுதுவதிலும் நிகரற்றவராய் விளங்கிப் பெரும்புகழ் படைத்தார். ஸ்ரீ பரகால ஸ்வாமியோடு யாத்திரையாகவும் இவர் எழுந்தருளியிருந்து ஆங்காங்கு மதாந்தரஸ்த வித்வான்களை வாதில் வென்று பலரைத் திருத்தியும் பணி கொண்டார். அப்போதிருந்த மைஸூர் மஹாராஜரும் இவரை மிகச்சிறப்பாக ஸன்மானித்தார்.

இந்த மஹான் அனேக வேதாந்த வாதக்ரந்தங்களையும் அலங்கார க்ரந்தங்களையும் தர்க்க சாஸ்த்ரத்தில் வாதக்ரந்தங்களையும் செய்தருளியிருக்கிறார். இவர் இயற்றியருளின வேதாந்த வாதாவளியில் பரிசயமின்றிக்கே ஸ்ரீ பாஷ்யாதிக்ரந்தங்களை நிர்வஹிப்பவர்கள் வேதாந்திகளாகக் கருதப்படுவதில்லை. எனவே, இவருடைய வாதக்ரந்தங்களில் பரிபூர்ண அவகாஹநம் பெற்றவர்களுக்கே வேதாந்த மருமங்கள் விளங்குமென்பது ஸர்வநிர்விவாதம்.

இந்த ஸ்வாமி நாற்பது திருநக்ஷத்ரமே இந்த விபூதியில் எழுந்தருளியிருந்தார். இவர் எம்பெருமானாரை ஸாக்ஷாத்கரித்தவர் என்று ஒரு ஐதிஹ்யம் சொல்லிப்போருவர்கள்; மாயாவாதிகளுக்கு முக்கிய க்ரந்தமாகிய [ப்ரஹ்மாநந்தீயவ்யாக்யாஸஹிதமான] அத்வைத ஸித்தியென்னும் க்ரந்தத்திற்குக் கண்டனமாக ந்யாயபாஸ்கரமென்கிற மிகச்சிறந்த க்ரந்தத்தை இந்த ஸ்வாமி செய்தருள ஆரம்பித்து முதல்பரிச்சேதம் எழுதி முடித்தவன்று மிகப்ரபல வித்வான்களான சில அத்வைதிகள் இதையறிந்துவந்து வாதப் போருக்கழைத்துப் பலவகையான குத்ஸித வாதங்களைப் பண்ணினார்களாம். அப்போது பரகால மடத்தில் வித்வான்களாயிருந்த சில ஸ்ரீவைஷ்ணவர்களும் "ஸ்ரீமத் வரவரமுநி ஸம்ப்ரதாயஸ்தராயிருக்கின்ற இவரை நம் ஸம்ப்ரதாயஸ்தராக ஆக்கிக்கொள்வதற்கு இதுவே நல்ல ஸமயம்" என்று பார்த்து அவர்கள் ஸ்ரீமத் வரவரமுநி விஷயமான தூஷணைகளைப் பொழிந்து இவருடைய திருவுள்ளத்

திலே மிகவும் காலுஷ்யத்தையுண்டு பண்ணினார்களாம். இவ்விரண்டு வகையான ஸம்பவங்களால் இந்த ஸ்வாமி மிகவும் திருவுள்ளம் கலங்கித் திருக்கண்வளர்ந்தருளுகையில் அன்றிரவு கனவிலே ஆதிசேஷன் முதலிலே எம்பெருமானாராகவும் பிறகு மணவாளமாமுனிகளாகவும் இவர்க்கு ஸேவை ஸாதித்து நல் தெளிவு பிறப்பித்ததாக ப்ரஸித்தம்.

இவ்விஷயத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாகவே அந்த ந்யாய பாஸ்கரத்தில் அன்று எழுதத்தொடங்கிய இரண்டாவது பரிச்சேதத்தின் உபக்ரமத்தில்,

“ 𑌶𑍇𑌷𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌨𑌿𑌗𑌮𑌮𑌕𑍁𑌟𑍀𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑌕𑍍𑌷𑌾𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌵𑌰𑌜𑌮𑍁𑌨𑌿𑌤𑌾𑌂 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑍃𑌤𑌾𑌂 𑌚 ।
𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍 𑌦𑍃𑌪𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌮𑌤𑌪𑌟𑌲𑍀𑌪𑌾𑌟𑌨𑍋𑌦𑍍𑌦𑌾𑌮𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃
𑌭𑍂𑌯𑌾𑌦𑍍𑌭𑌵𑍍𑌯𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌮𑌹𑌿𑌮𑌾 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇 𑌭𑍂𑌯𑌸𑍇 𑌨𑌃 ॥

शेषः श्रीमान् निगममकुटीयुग्मरक्षाप्रवृत्तः श्रीमद्रामावरजमुनितां रम्यजामातृतां च ।
विन्दन् दृप्यद्विमतपटलीपाटनोद्दामसूक्तिः भूयाद्भव्यप्रथितमहिमा श्रेयसे भूयसे नः ॥”

என்கிற சுலோகத்தை நிவேசிப்பித்தருளினார்.

மற்றும் இவருடைய வைபவங்கள் இன்னமும் விரிவாக அறிய வேண்டியவை பலவுள; அவை, இவருடைய பாகிநேயரான பெங்களூர் (Late) கல்கிஸிம்ஹம் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி வெளியிட்டிருக்கிற வைபவப்ரகாசிகையிலிருந்து அறியத்தக்கன, இந்த வைபவ ஸங்க்ரஹம் அதிலிருந்தும் தொகுக்கப்பட்டது. ... ... [ஆக இந்த சுருக்கமான வைபவம் ஏற்கெனவே பல வருஷங்களுக்கு முன்பு அடியேன் எழுதி வெளியிட்டிருந்தது.]

மேலே குறித்த வைபவஸங்க்ரஹத்திலுள்ள விஷயங்களை அடியேன் சிறிது விவரித்துப் பேசினேன். அடியேன் அதிபால்யத்தில் ஸ்ரீ ஜகத்குரு காதிஸ்வாமியோடுகூட ஹைதராபாத் சென்று அங்கு ஸீதாராம்பாக்கில் வாழ்கையில் திருநாராயணபுரம் பண்டயம் ஆழ்வார்ஸ்வாமியென்கிற ப்ரஸித்தரான வித்வத்ஸார்வபௌமரிடத்தில் அடியேன் (ப்ரஸ்துத) அனந்தாழ்வார் ஸ்வாமியின் வேதாந்தவாதாவளியில் தலைபெற்ற ஸித்தாந்த ஸித்தாஞ்ஜநமென்னும் க்ரந்தத்தை வாசிக்க நேர்ந்தது. அப்போது அந்த ஆழ்வார்ஸ்வாமி பாடப்ரவசநத்திற்கு முன்னும் பின்னும் அனந்தாழ்வார் ஸ்வாமியைப்பற்றிச் சிலபேசிக் கண்ணுங் கண்ணீருமாயிருப்பர். அப்போதே பிடித்து அடியேனுக்கு அனந்தாழ்வார் ஸ்வாமி பக்கலிலே ஹார்தமானவொரு ப்ராவண்யமுண்டாகியிருந்தது. முன்னம் ப்ரஸ்தாவித்த ‘அழகியமணவாளர்’ ஸ்வாமியினால் அந்த ப்ராவண்யம் அபிவ்ருத்தி செய்யப்பட்டிருந்தது. அதை அடியேன் மேலே குறித்த வித்வத்ஸதஸ்ஸில் விளங்கச்செய்துகொள்ள எதிர்பாராத அவகாசமொன்று கிடைத்ததற்கு மிகவும் [illegible] செய்து அடியேனுடைய சிற்றுரையை முடித்துக்கொண்டேன்.

பிறகு, அவ்வூரில் ஸுப்ரஸித்த வித்வந்மணியாக எழுந்தருளியிருந்த ஜக்கு வேங்கடாசார்யஸ்வாமியின் திருக்குமாரர் அனந்தாழ்வார் அருளிச்செய்திருந்த லோகோத்தரமான [illegible]ப்ரபந்தமொன்றை [illegible]மாக வாசித்து ஸதஸ்யர்களை மிகவும் ரஞ்ஜிப்பித்தார். பிறகு, அக்ராஸநாதிபதிகளான ஜீயர்ஸ்வாமிகள் “மதுரேண ஸமாபயேத்” என்கிறபடிக்குச் சேர ஸமயோசிதமான மதுரோக்திகளைப் பொழிந்து ஸதஸ் ஸமாபனம் செய்தருளியாயிற்று. ... ... *

பெங்களூரில் உபந்யாஸம்

அடியேன் திருநாராயணபுரத்திலிருந்து மறுநாள் பெங்களூர் விடைகொள்ள நேர்ந்தது. அவ்விடத்திலுள்ள சில ஸஹ்ருதய ஸஹ்ருந்மணிகள் சாமராஜபேட்டையிலுள்ள கர்ணாடக ஸாஹித்ய பரிஷத்து ஹாலில் கீதாரஸம் என்னுமோர் உபந்யாஸம் செய்ய ஏற்பாடு செய்தனர். அவ்விடத்திலுள்ள சில பல லௌகிக மஹநீயர்களின் அநுரோதத்தினால் இது அநிவார்யமாயிருந்தது. அவர்கள் ஆங்கிலபாஷையில் வெளியிட்டிருந்த வொரு விளம்பரம்—

The President & Members of

Yoga Centre Bangalore-4.

cordially invite you to attend the tecture by

His Holiness Jagdacharya Simhasandista Mahavidwan

Sri Sri P. B. ANNANGRACHARYA of Kanchee.

[illegible]

"GEETHA RASA"

on Wednecday the 23rd Jan. 1963 at 6 p. m. at Kannada Sahitya Parishat Hall, Harding Road, Chamarajapet, Baugalore-18.

Hon'ble Sri B. VAIKUNTA BALIGA, B.A., B.L.

(Speaker, Mysore Legislative Assembly)

Presdes.

M. V. KRISHNA MURTHY
Conuener.

A. R A. ACHARYA
Genral Secretary.


PROGRAMME

1	Invocation	
2	Welcome	by Dr. Acharya
3	Introdsction of His Holiness	by Sri M. V. Krishna Murthy
4	Swamiji Speaks	"Geeth Rasa"
5	Conclusion Speech	by President
6	Vote of Thanks	by Sri Chand Ratna Mohta


இந்த ப்ரோக்ராம்படியே 23-1-63 புதன்கிழமையன்று மாலையில் இவ்வுபந்யாஸம் நடைபெற்றது. அப்போதைய படமொன்று அடுத்தபேஜில் காணத்தக்கது.

ஆந்திரப் பிராந்தஸூர்யாஸ்தமயம்.

ஆந்திரப்ராந்தத்தில் விஜயநகரத்தில் ஸ்ரீமத் உ. வே. வெங்கடராமாசாரியர் ஸ்வாமி யென்று ப்ரஸித்தரான ஸ்ரீவைஷ்ணவ வித்வந்மணி யெழுந்தருளியிருந்தார். அந்த ப்ராந்தத்தில் இந்த ஸ்வாமியிடத்தில் ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களையும் ஸ்ரீபாஷ்யபகவத்விஷயாதிகளையும் ஸேவித்து வ்யாபகர்களான வித்வான்கள் பலருளர். இந்த மஹான் எண்பது திருநக்ஷத்திரம் வாழ்ந்திருந்து நேற்று மார்கழித்திங்கள் முடிவில் ஸ்வஸ்தானத்திலேயே திருநாட்டுக்கெழுந்தருளினர். இவருடைய ஸ்தானத்தைப் பூர்த்திசெய்யவல்ல வித்வான் இல்லாமையாலே இது அத்யந்த சொசநீயம். ஆனாலும் இவருடைய வித்யார்த்திகளான வித்வான்கள் சிலருளர்.



சுபக்ருத் ௵ மார்கழி முப்பதும் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி
ஸன்னிதியில திருப்பாவை கோஷ்டியின் காட்சி



சுபக்ருத்ஷு மார்கழி முப்பதும் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி
ஸன்னிதியில் திருப்பாவை கோஷ்டியின் காட்சி

காஞ்சீபுரம் க்ரந்தமாலா ஆபீஸில் கிடைக்கக்கூடிய P B A. பதிப்பு நூல்கள் யாவும் சென்னை வாஸிகளுக்கு தபால் செலவு இல்லாமல் கிடைப்பதற்கு திருவல்லிக்கேணி தென்னண்டை மாடவீதி, 21 நெ. M. A. கிருஷ்ணம்மாள், B A, B.L. இடம் புத்தகசாலையொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஸத்க்ரந்தப்ரகாசன ஸபையார்.

உபந்யாஸஸப்தகம்

ஸ்ரீகாஞ்சி P. B. அண்ணங்கராசாரியர்

1. மதியும் விதியும்.

விதியானது எவராலும் கடக்க முடியாததெனப்படும். "தைவம் திஷ்டம் பாகதேயம் பாக்யம் ஸ்த்ரீ நியதிர் விதி:" என்று அமரகோசமாதலால் தைவத்திற்கே விதியென்று பெயர். ஒவ்வொரு பிராணிக்கும் ஜனிக்கும்போதே ஆயுள் முதலானவற்றில் ஒருவிதமான தைவஸங்கல்பம் ஏற்பட்டுவிடுகிறது. அதுதான் விதியென்பது. அந்த விதிப்படியேதான் எதுவும் நடைபெற்றுவரும். அது பழுதுபடமாட்டாது. விதிக்குமாறாக எதுவும் நடைபெறாது. "லலாடலிகிதா ரேகா பரிமார்ஷ்டும் ந சக்யதே." என்கிற வசனம் யாவருமறிந்தது. 'தலையெழுத்து ஒருவராலும் தவிர்க்க முடியாதது' என்பது இதன் கருத்து.

உண்மையில் தைவபலமென்பது எல்லாவற்றினும் மேம்பட்டதாதலால் அது அநிவார்யமென்பது மறுக்க முடியாததே. ஆனால் "மதியினால் விதியை வெல்ல முடியும்" என்பது நுண்ணறிவாளர்களின் முதுமொழியாகக் காண்கிறது. இதற்குச் சேர இதிஹாஸ புராணங்களிற் கதைகளும் பல காணப்படுகின்றன. சில கேண்மின்.

ஸாவித்ரியினால் தனக்கு ஸத்யவானோடு விவாஹம் நிச்சயிக்கப்பட்டது. இதையறிந்த நாரதமுனிவர் 'ஸத்யவானுடைய ஆயுள் மிகவும் குறுகியுள்ளது; அவனை மணந்து கொண்டால் ஸாவித்திரி நீண்டகாலம் வாழமுடியாது; எப்படியாவது இந்த விவாஹத்தை நிறுத்தி வேறு தீர்க்காயுஸ்ஸான வொரு வரனுக்கு இவளை விவாஹம் செய்து கொடுப்பதே நலம்' என்று தெரிவித்தார். ஸாவித்ரி இதற்குச் சிறிதும் உடன்படவில்லை. விவாஹம் மாநஸிகமென்றும் வாசிகமென்றும் காயிகமென்றும் மூவகைப்படும். இன்னவரை விவாஹம் செய்துகொள்ள வேணுமென்று நெஞ்சால் நினைப்பது மாநஸிக விவாஹம். அதனை வெளிப்படையாகப் பேசி முடித்துக்கொள்வது வாசிகவிவாஹம். அநுஷ்டான பர்யந்தமாக முடித்துக்கொள்வது காயிக விவாஹம். பிராமாணிகர்களுக்கு இம்மூன்றும் துல்யமேயன்றி இவற்றுள் வாசி கிடையாது. இன்னானை மணந்து கொள்வதென்று நெஞ்சால் நினைத்தவாறே அது நடந்தேறியதுதான். அதை மாற்றி வேறுவிவாஹம் செய்து கொள்வதென்பது விதவா விவாஹ பர்யாயமேயாகும். உத்தமியான ஸாவித்ரி இதனை எங்ஙனம் இசையவல்லள்? ஏற்கெனவே பதியாக வரிக்கப்பட்ட ஸத்யவானைத் தவிர்த்து வேறொருவனை நெஞ்சாலும் நினையேனென்று உறுதி கொண்டாள். என் தலையெழுத்துப்படி ஆகட்டுமென்று கூறி அவனையே மணம்புணர்ந்து வாழ்ந்து வந்தாள். ஒரு ஸம்வத்ஸரத்திற்குள் ஸத்யவானுக்கு மரணம் அணித்தாயிற்று. ஸாவித்ரி யமனை நேரில் கண்டு பேசித் தனது வாக்சாதுர்யத்தினால் யமனை யீடுபடுத்தித் தான் தீர்க்க ஸுமங்கலியாக வாழப்பெற்றாள். இக்கதை மஹாபாரதத்தில் வநபர்வாவின் முடிவில் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இக்கதையைச் சிறிது விரிவாகக் கேண்மின்;—

மத்ர தேசத்தரசன் அச்வபதி யென்பவன் ஸாவித்ரீ தேவதையின் உபாஸனையினால் ஒரு மகளைப் பெற்று அவளுக்கு ஸாவித்ரி யென்றே பெயரிட்டு வளர்த்து வர, அவளுக்கு விவாஹ யோக்யமான வயஸ்ஸுவந்தும் அவளது தேஜஸ்ஸு அப்ரதிமமாய் ஒருவர்க்கும் அணுக வொண்ணாதபடி யிருந்ததனால் அவளை ஒருவரும் மனைவியாக வரியாதிருக்க, பிதாவானவர் 'பெண்ணே! நீயே சென்று உனக்குத்

தகுந்த வரனை ஸ்வயம்வரமாக லபிக்கக் கடவை' என்று கட்டளையிட்டு மந்திரிகளுடன் அவளைத் தேரின்மேலேற்றி யனுப்ப, அவளும் தந்தையிட்ட கட்டளையின்படி பல தேசங்களிலும் சென்றுபார்த்துத் தனக்கேற்ற வொருவரனை நிர்ணயித்துக்கொண்டு தந்தையிடம் திரும்பி வந்தாள். அப்போது நாரத மஹர்ஷியும் தந்தையும் உடன் வீற்றிருந்தனர், இவள் எங்குப்போய் வருகிறாள்? என்ன செய்தி?' என்று முனிவர் கேட்க; ஸாவித்ரியே சொல்லத் தொடங்கினாள்:—ஸால்வதேசத்தரசனான த்யுமத்ஸேனன் கண்ணில்லாதவனும் ராஜ்ய மிழந்தவனுமாயிருக்கின்றானே; அவனுடைய அருமைப்புதல்வன் ஸத்யவானென்பவன், அவனை நான் கணவனாக வரித்துவந்திருக்கிறேனென்றாள். இது கேட்டவுடனே நாரதமுனிவர் 'அந்த ஸத்யவான் மஹா குணசாலி யென்பதில் ஐயமில்லை; ஆனால் அவனது ஆயுள்முடிவு இன்னும் ஒரு ஸம்வத்ஸரத்தினுள்ளே யாம்' என்று தெரிவிக்க, அரசன் மகளை நோக்கி 'அம்மா ஸாவித்ரி! முனிவர் சொல்வதைக் கேட்டாயன்றோ; அல்பாயுஸ்ஸான அவனை விட்டு வேறு கணவனைத் தேடிக்கொள்' என்று சொல்ல, அதற்கு ஸாவித்ரி சிறிதும் உடன்படாமல் 'என் விதிப்படியாகட்டும்; மாநஸிகமான விவாஹம் முடிந்துவிட்ட பிறகு இனி அதனை மாற்றிக்கொள்வதென்பது நடவாத காரியம்' என்று சொல்ல, அரசனும் நாரத முனிவருடைய அநுமதியைப் பெற்றுக் கொண்டு ஸாவித்ரியின் விவாஹத்தை நிறைவேற்றுவதாகப் பரிஜந பரிவார புரோஹிதாதிகளுடன் புறப்பட்டு அரண்யத்தில் தாய் தந்தையோடு வாஸஞ்செய்து கொண்டிருக்கின்ற ஸத்யவானுக்கு முறைப்படி விவாஹம் செய்து கொடுத்து வந்தனன்.

ஸத்தியவான் ஸாவித்திரியோடு இல்லற வாழ்க்கையை நடத்திவருகிறான்; ஸாவித்திரி ஸர்வாபரணங்களையும் கழற்றிவிட்டு மரவுரியையும் காஷாயத்தையு மணிந்து கொண்டு பதிசுச்ரூஷையில் ஊன்றி யிருந்தாள். இப்படி காலம் சென்று கொண்டிருக்கையில் நாரதமுனிவர் சொல்லியிருந்த நாள் குறுகினதை நெஞ்சிற் கொண்டாள். கணவனுடைய மரணம் நான்கு நாளில் நேரப்போகிற தென்றறிந்து முன்னமே யொரு த்ரிராத்ர வ்ரதத்தை யனுட்டித்து முடித்தாள். அந்த நாளும் அணுகிவிட்டது. ஸத்யவாந் கோடாலிப்படையை யெடுத்துக் கொண்டு வழக்கம் போல் வனஞ்சென்றான். அன்று ஸத்யவான் வனமேகி உணவுப்பொருள்களை சேகரித்துக்கொண்டு விறகு வெட்டப் புகுகையில் மரணக்குறிகள் தோன்றத் தொடங்கின. உடனே அவன் தனக்குண்டான கிலேசங்களைச் சொல்லிக் கொண்டு ஸாவித்ரியின் மடியில் தலைவைத்துத் தரையில் படுத்துக் கொண்டான். நாரதமுனிவர் சொன்னபடி கணவனது மரணகாலம் ப்ராப்தமாய்விட்ட தென்றறிந்த ஸாவித்ரி மிகவும் சோகித்திருக்கையில் பாசமும் கையுமாக அங்கு வந்து நின்ற யமனையும் கண்டு மெல்லவெழுந்து கைகூப்பி நின்று 'உம்மைப் பார்த்தால் அமாநுஷ தேவதையாகக் காண்கிறது; நீர் யார்? இவ்விடம் எதற்காக வந்தீர்?' என்று விநயமாய்க் கேட்க; அதற்கு அவர் 'அம்மா ஸாவித்ரி! நீ சிறந்த பதிவிரதையாதலால் உன்னோடு பேசுகிறேன். நான் யமன்; உனது கணவனுடைய வாழ்நாள் முடிந்துவிட்டபடியால் அவனுயிரைக் கொண்டுபோக வந்திருக்கிறேன், பெரும்பாலும் எனது கிங்கரர்களே வந்து இக்காரியம் செய்து போவது வழக்கம். ஆயினும் உன் கணவன் பரமதார்மிகனாகையாலே அவர்கள் இவனை யணுக சக்தரல்ல ரென்று நானே வர நேர்ந்தது' என்று சொல்லிக் கொண்டே ஸத்யவானுயிரைக் கவர்ந்து கொண்டு தென்திசை நோக்கிச் செல்லலுற்றான். ஸாவித்ரியானவள் மிக்க வருத்தத்துடன் யமனைப் பின் சென்றாள். அதுகண்ட யமன் 'அம்மா ஸாவித்ரி! நீ என்னோடு கூட வருவதில் பயனில்லை; திரும்பிச்செல்; கணவனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை முறைப்படி நிறைவேற்றப் பார்' என்றான். அப்போதும் ஸாவித்ரி மீளாமல், கணவனுயிர் செல்லுமிடத்தே என்னுயிரும் செல்லத்தக்கதன்றோ வென்று சில தருமநுட்பங்களைச் சொன்னாள்; அவைகேட்ட யமன் மிகமகிழ்ந்து 'அம்மா! உனது கணவனுயிரைத் தவிர்த்து வேறு வேண்டிய வரம் என்பால் பெற்றுப் போ' என்றான். 'கண்கெட்டு

வனத்தில் கிலேசப்படுகின்ற எனது மாமனர் கண்பெற்று வாழ அருள்புரிக' என்று கோரினள். யமனும் அங்ஙனமே யாகுக வென்று அருள் செய்தவிடத்தும் ஸாவித்ரீ மீளாமலே பின்னையும் தொடர்ந்தாள். அம்மா! வீணுக சிரமப்பட்டு என்னைப் பின் தொடராதே; திரும்பிச் செல்' என்று யமன் சொல்லவும் திரும்பாமலே மற்றும் பல தருமநுட்பங்களைப் பேசிக்கொண்டே பின்தொடர்ந்தாள். அப் பேச்சுக்களுக்கு மிகமகிழ்ந்த யமன் 'கணவனுயிரைத்தவிர்த்து வேருெரு வரம் பெற் றுப்போ' என்ருன். 'ராஜ்யப்ரஷ்டரான என் மாமனர் ராஜ்யம் பெற்று இனிது வாழ வேணுமென்று கோரி, அங்ஙனமே வரம் பெற்றும் மீளாமலே மேலும் பலதரும ஸூக்ஷ்மங்களைப் பேசிக் கொண்டே பின்தொடர்ந்தாள்; தன் தந்தைக்கு நூறு புத்திரர்கள் பிறக்கவேணுமென்று வரம்பெற்ருள். பின்னையும் பின்தொடர்ந்து இனிதாகப் பேசிக்கொண்டுபோய், தனக்கு ஸத்யவானிடத்தில் நூறு புத்திரர்கள் பிறக்கவேணுமென்று வரம் கேட்டாள். யமன் மெய்மறந்து அந்த வரத்தையும் கொடுத்து ஸத்யவானுடைய உயிரையும் தந்து போயினன். மதியினல் விதியை வென்று விட்டாளன்ருேவிவள்.

மார்க்கண்டேயன் பதினுறுபிராயமே வாழும் விதியுடையனுயிருந்து வைத்தும் தேவதா ஸமாராதன பலத்தினல் விதியைக்கடந்து நீண்ட ஆயுள்பெற்றமை கேள்விப் படுகின்ருேம். இங்ஙனே பலபல கதைகளினல் விதியை மதியால் வெல்லலாமென்பது திண்மை பெறுகின்றது. மதியிலாதவர்களே விதிக்கு வசப்பட்டிருப்பர்கள். அன்ன வர்களில் கம்ஸனைத் தலைவனுக நினைப்பது. .... (1)

2. பகவான் இருக்குமிடங்கள்

சிறுவர்கள் பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பிக்கும் போது ஒருவர்க்கொருவர் ஸம்பாஷணை செய்கையில் பல விநோதப்பேச்சுக்களைப் பேசிக்கொள்வதுண்டு. அவற் றுள் ஒரு விநோதப் பேச்சு—'இராமா! கடவுள் இருக்குமிடத்தை நீ சொல்லுவா யாளுல் உனக்கு ஓரணு தருவேன்' என்று கண்ணன் சொல்ல, அதற்கு இராமன் 'கண்ணு கடவுள் இல்லாதவிடத்தை நீ சொல்லுவாயானல் உனக்கு இரண்டணு தரு வேன்.' என்ருன் என்பது. இதனல், எம்பெருமான் எங்கும் நிறைந்த பரம்பொருள் என்கிற வுணர்ச்சி இளம்பிராயம் தொடங்கியே நம்மவர்களது நெஞ்சிற் பதிந்திருப் பதாகத் தெரியவருகின்றது. *அந்தர் பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:* என்று வேதாந்தபரிசயம் செய்த பிறகு பெரியார்களுக்கு உண்டாகக் கடவதான உணர்ச்சி சிறுவர்களுக்கு உண்டாகிறதென்ருல் இதற்குக் காரணம் உயர்குடிப் பிறப்பே யென்னவேணும். ஸத்குல ப்ரஸூதி யென்பது மஹாஸுக்ருத பலங் களில் தலையானது. உயர்குடியிற் பிறந்தவர்களுக்கு ஆஸ்திக்யம் முதலான சிறந்த குணங்கள் இயற்கையிலேயே தோன்றுகின்றன. எங்குமுளன் கண்ணனென்ற வுணர்ச்சி முற்காலத்தில் ப்ரஹ்லாதாழ்வானுக்குத் தோன்றி யிருந்ததாக இதி ஹாஸ புராணங்களினலறிகிருேம். அவ்வுணர்ச்சி ஆஸ்திக குடும்பங்களில் ஒவ் வொரு சிறுவர்க்கும் உண்டாகி வருவதாகக் காண்கிருேம். இளம்பிராயத்திலுள்ள வுணர்ச்சி மேன்மேலும் வளர வேண்டுவது ப்ராப்தமாயிருக்க, இக்காலத்தவர்களுக்கு வயது முற்றமுற்ற இளம்பிராயவுணர்ச்சிக்கு எதிரிடையான வுணர்ச்சியே உன்மேஷ மடைவதாகக் காண்கிறது. 'எம்பெருமான் எங்குமுளன்' என்பதற்கு எதிராக எம் பெருமானெங்குமிலன், எம்பெருமானே யிலன்' என்கிற பிரசாரமே முற்றுகின்றது.

'எம்பெருமான் எங்கும் நிறைந்தபொருளாகில் கோவில்களிற் சென்று தொழ வேண்டுவதேன்? ப்ரஹ்லாதன் எந்த கோயிலுக்குப் போனன்?' என்றிப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்க முன்வருகிருர்கள் நவநாகரிகர்கள். காற்று எங்கும் நிறைந்த பூதமாயிருக்க அதற்காக விசிறியைத் தேடுவதேன்? நூறுமாயிரமும் செலவுசெய்து

எலெக்ட்ரிக் பங்காக்கள் போட முயல்வதேன்? என்று அவர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும். "அக்நௌ திஷ்டதி விப்ராணும் ஹ்ருதி திஷ்டதி யோகிநாம். ப்ரதிமாஸு அப்ரபுத்தாநாம் ஸர்வத்ர ஸமதர்சிநாம்." என்கிறார்கள் மஹர்ஷிகள். இந்தச்லோகத்தின் பொருள்யாதெனில்; பகவான் அந்தணர்களுக்கு அக்நியிலுள்ளான்; யோகிகளுக்கு உள்ளத்தே யுள்ளான்; அறிவிலிகளுக்குப் பிரதிமைகளிலுள்ளான்; ஸமதர்சிகளுக்கு ஸர்வத்ரவுள்ளான்—என்பதாம்.

அந்தணர்களுக்கு பகவான் அக்நியிலிருக்கிறனென்றால் என்ன கருத்தென்னில் "குளித்து மூன்றனலை யோம்புங் குறிகொளந்தணமை" என்று திருமாலையில் தொண்டரடிப் பொடியாழ்வாரருளிச் செய்கிறபடி அந்தணர்கள் தங்களுக்குரியதான நித்யகர்மா நுஷ்டானத்தில் நிரதர்களாயிருந்தால்— * "வர்ணாச்ரமா சாரவதா புருஷேண பர: புமாந், விஷ்ணு ராராத்யதே, பந்தா நாந்யஸ் தத்தோஷகாரக: * 'எனப்பட்ட பகவதாராதந நிரதர்களா யிருந்தால் அதன் மூலமாக பகவத் தர்சனம் கிடைக்குமென்றவாறு.

யோகிகளுக்கு ஹ்ருதயத்திலிருக்கிறனென்றதன் கருத்து—*மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னுந் தெய்வத்தை நாட்டி, ஆர்வமென்பதோர் பூவிட வல்லார்க்கு* என்று பெரியாழ்வா ரருளிச் செய்தபடி ஜிதேந்திரியர்களாய் தியானம் செய்யவல்லவர்களுக்கு அந்த தியானத்தின் மூலமாகவே பகவத் தரிசனம் கிடைக்குமென்பதேயாம்.

அப்ரபுத்தர்களுக்கு ப்ரதிமைகளி லிருக்கிறனென்றது—அர்ச்சாமூர்த்திகளில் ஆழங்காற்பட்டு * உலகமேத்துங் கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லையென்று மண்டினுருய்யலல்லால் மற்றையார்க் குய்யலாமே * என்ற திருமங்கையாழ்வாரருளிச் செயலில் திடநம்பிக்கை கொண்டு திவ்யதேச ப்ராவண்யமே போது போக்காயிருப்பார்க்கு அதன் மூலமாகவே பகவத் தர்சனம் எளிதாகு மென்றபடி.

ப்ரபுத்தர்களோடு அப்ரபுத்தர்களோடு வாசியற அனைவர்க்கும் அர்ச்சையே தஞ்சமாயிருக்க "அப்ரபுத்தாநாம் ப்ரதிமாஸு" என்று சொல்லியிருக்கிறதே, இதுவென்? ப்ரதிமைகளி லீடுபட்டிருந்த ஆழ்வார்களும் நாதயாமுநயதிவராதிகளான பூர்வாசார்யர்களும் அப்ரபுத்தர்களோ? என்று கேள்வி பிறக்கும். இதைப் பற்றிப் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தியே ஒன்றுள்ளது; அதைப் பற்றிப் பிறகு பேசுவோம்.

இனி, * ஸர்வத்ர ஸமதர்சிநாம் * என்றுள்ளது. அக்நிகார்யமும் வேண்டாமல் ஹ்ருதயத்தில் தியானமும் வேண்டாமல் அர்ச்சையில் ஆழங்காற் படுதலும் வேண்டாமல் ப்ரஹ்லாதாழ்வானைப் போன்றிருப்பார்க்கு எங்கும் பகவத் தர்சனம் கிடைக்குமென்றபடி. ... . (2)

3. கண்ணபிரானும் குசேலமுனிவரும்

ஸத்யஸங்கல்பனான எம்பெருமான் இந்நிலவுலகில் அவதாரங்கள் செய்யாமலே தன்னுடைய ஸங்கல்ப சக்தியினாலேயே எதையும் செய்து தலைக்கட்டிவிட முடியும். * நாட்டில் பிறந்து படாதன பட்டு மனிசர்க்காய்* என்று நம்மாழ்வாரருளிச் செய்கிறபடி கர்மவச்யர்களான நம்போல்வாரும் படாத கஷ்டங்களை அகர்மவச்யனான தான் பட்டு எதற்காக இந்நிலத்தில் வந்து பிறக்கவேணும்? எத்தனை அஸுர ராக்ஷஸர்களைக் கொல்ல வேணுமானாலும் * "விச்வம் திஷ்யைவ விரசய்ய நிசாய்ய பூயஸ் ஸஞ்ஜஹ்ருஷ:" * என்று ஆழ்வானருளிச் செய்த கணக்கிலே ஸங்கல்ப மாத்ரத்தாலே அது செய்யமுடியாதா? ஸாதுபரித்ராணம் எவ்வளவு பண்ண வேணுமானாலும் "நந்வஸ்தி விச்வபரிபாலநஜாகருகஸ் ஸங்கல்ப ஏவ" என்று தேசிகனருளிச் செய்கிறபடி ஸங்கல்

பத்தாலே பண்ணமுடியாதா? எதற்காக மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்து வருந்த வேண்டும்? என்று பலர் கேட்பதுண்டு. இதற்கு நம் பூருவாசாரியர்கள் ஆச்சரியமான ஸமாதானத்தை அருளிச் செய்தேயுள்ளார்கள் துஷ்க்ருத் விநாசநம் ஒருவாறு ஸங்கல்பஸாத்யமானாலும் ஸாது பரித்ராணம் ஸங்கல்ப ஸாத்யமாகாதென்று ஸ்வாமி யெம்பெருமானார் அந்தரதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் வ்யக்தமாக அருளிச் செய்துள்ளார். முடிவாகத் தேர்ந்த பொருள் யாதெனில், எம்பெருமான் ஸங்கல்ப சக்தியாலே செய்தருளுமளவில் ஸாது பரித்ராண துஷ்க்ருத் விநாசாதி ரூபங்களான காரியங்கள் ஒருவாறு நிறைவேறி விடுகின்றனவென்று கொண்டாலும் தன்னுடைய அற்புதமான திவ்ய கல்யாண குணங்களை வெளியிட ப்ராப்தமேயாகாது; திருக்கல்யாண குண ப்ரகாசனமே எம்பெருமானுக்கு ப்ரதானமான உத்தேச்யம். அதனை ஸங்கல்பத்தால் நிறைவேற்றவே முடியாது, அதற்காகவே அவதாரங்கள் செய்து போருவது—என்பதே. இதையே பட்டர் "குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்" என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் வெளியிட்டருளினார். நீர் நிரம்பின காலத்தில் ஏரிகளுக்குக் கலுங்கல் எடுத்து விடாவிட்டால் எப்படி தரிப்பு அரிதோ, அப்படியே குணபுஷ்கலனான எம்பெருமானுக்கும் அவதாரங்கள் செய்யாவிடில் குணங்களைக் கொண்டு தரிப்பு அரிது என்பது காட்டப்பட்டது. இது தோன்றவே ஸ்ரீராமாயணத்தின் ஆரம்பமே "கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச் ச வீர்யவாந்" இத்யாதி குண ப்ரச்னமாகவே நிகழ்ந்திருக்கின்றது. ஸ்ரீராமாயணாதி இதிஹாஸ புராண ப்ரவசனம் செய்தருளும் மஹான்களும் கதா ஸந்தர்ப்பங்களில் முக்கியமான நோக்கு வையாதே ஆங்காங்கு ஆவிஷ்க்ருதமாகின்ற திருக்குணங்களிலேயே தாங்களுமுருகி ச்ரோதாக்களையும் உருக்குகின்றார்கள்.

ராமராவணயோர் யுத்தம் ராமராவணயோரிவ என்னும்படி இராமனுக்கும் இராவணனுக்கும் ப்ரபல யுத்தம் நடந்ததென்று இதைப் பல ஸர்க்கங்களால் வான்மீகி முனிவர் பெருக்கிப் பேசினாலும் *பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை யென்று பேசலாம் படியான மஹாவீரன் ஒரு புழுவோடே போராடினதில் வியப்பார் ஆரேனுமுளரோ? அந்த ஸந்தர்ப்பத்தில் "சசால சாபஞ்ச முமோச வீரः" என்னும்படி நிசாசரர்கோமான் நிலைகலங்கி நின்றபோது "இன்று போய் நாளை வா" என்று பெருமாள் திருவுள்ளமிரங்கி விடைகொடுத்துவிட்டாரே! இந்த திருக்குணம என்னே என்னே! என்று இதற்கு உருகுகிறார்களே தவிர, சரமாரி பொழிந்த சேவகத்திற்கு உருகுவார் ஒருவருமிலரே. கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில்—"யத் நாத்ரு சாகஸமரிம் ரகுவீர வீக்ஷ்ய" என்ற ச்லோகத்தினால் இந்தத் திருக்குணத்திற்கு உருகும் திறம் மரங்களுமிரங்கும் வகையன்றோ அமைந்துளது. திருநாவீறுடைய பிரானான திருமங்கையாழ்வார் *சுரிகுழற் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையிற் கடுவிசையரக்கன்* என்னும்படி நின்ற மஹாபாபியான இராவணனை உடனே தொலைத்தொழித்துத் திரும்பவேண்டியிருக்க, 'ரணார்திதஸ் த்வம்' என்று திருவுள்ளத்தில் புண்பாடு காட்டுவதும், ('ஆச்வாஸ்ய' என்று) உடம்புக்குத் தேற்றரவு செய்துகொள் என்பதும், 'கச்சாநுஜாநாமி' என்று வீட்டுக்குச் செல்ல விடை கொடுப்பதும் குணரஸிகர்களின் நெஞ்சை நீராயுருக்கக் கேட்க வேணுமோ?

ஸ்ரீராமாவதாரத்தில் காட்டின திருக்குணங்களிற் காட்டிலும் மிகச் சீரியவை க்ருஷ்ணாவதாரத்தில் காட்டின திருக்குணங்கள். நம்மாழ்வார் *பிறந்தவாறும் வளர்ந்தவாறும்* என்று சொல்லி ஆறு மாஸம் மோஹித்திருந்தது இவ்வவதாரத்திலே யன்றோ. க்ருஷ்ணாவதாரத்தில் எந்த கதாஸந்தர்ப்பத்தை யெடுத்துக் கொண்டாலும் ஆச்சரியமான திருக்குணம் விளங்கியே தீரும். இளம்பிராயக் கதைகள் நிற்க. யௌவன பிராயக்கதைகளில் குசேல முனிவர் வந்து சேருங் காலத்துக் கதை மிக ரமணீயமானது. இது ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தத்தில் 80, 81 அத்யாயங்களில் உள்ளது. குசேலோபாக்கியானம் அறியாதாரில்லை, அனைவருமறிந்ததே.

குசேல முனிவரை நோக்கிக் கண்ணபிரான் கூறும் வார்த்தைகளில் ஒன்றையே இங்கெடுத்துக்கொண்டு ரஸாநுபவம் செய்ய விரும்புகிறோம்.

கண்ணனைக் காணச்சென்ற குசேலர் கையில் அவல் கொண்டு போயிருக்கிறார். அதுவும் அவருடைய கந்தைத்துணியில் தங்காமல் கொட்டிப்போய்ச் சில கணங்களே தங்கியிருக்கலாயிற்று. அதையும் கொடுக்க லஜ்ஜித்திருக்கிறார். கண்ணபிரானே "கிமுபாயநமாநீதம் ப்ரஹ்மந் மே பவதோ க்ருஹாத்"=ஐயா! உம் அகத்திலிருந்து எனக்கு என்ன உபஹாரம் கொணர்ந்தீர்? என்று மடிபிடித்துக் கேட்கிறான். இன்னது கொணர்ந்தேனென்று கூறுவதற்கு நா எழும்பவில்லை. கொணர்ந்த அற்ப வஸ்துவை என்னவென்று கூறுவது? என்னவென்று கொடுப்பது! என்று தடுமாறி நிற்கிறார் பாவம்! அந்த ஸங்கோசத்தை யறிந்து கொண்ட கண்ணபிரான் அப்போது கூறுகின்றான்—"அண்வப்யுபாஹ்ருதம் பக்தை: ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத், பூர்யப்யபக்தோபஹ்ருதம் ந மே தோஷாய கல்பதே" என்று. பக்திமான்கள் அணுவளவு இட்டாலும் அது அன்பின் கனத்தாலே என் புத்திக்கு மிகப் பெரிதாகவே தோற்றும்; அன்பிலாதார் மிகக்கனக்க இட்டாலும் அதனால் நெஞ்சு கனியேன்—என்பது இந்த ச்லோகத்தின் பொருள். இதனால், பகவான் பக்தர்களிடத்துக் கடுகையும் மலையாகக் கொள்ளுமியல்வினன் என்பது பெறப்படும்.

கீதையில் ஒன்பதாமத்யாயத்தில் கூறியுள்ள "பத்ரம் புஷ்பம் பலம் தோயம்" என்ற ச்லோகமும் இந்த ப்ரகரணத்தில் கண்ணனால் பூர்த்தியாகக் கூறப்பட்டிருக்கின்றது. அந்த ச்லோகத்தின் கடைசி பாதம் "அச்நாமி ப்ரயதாத்மந:" என்பது. இவ்விடத்து கீதாபாஷ்யத்தில் எம்பெருமானார் அருளிச் செய்வதாவது—"மநோரதபத தூரவர்த்தி ப்ரியம் ப்ராப்யேவ அச்நாமி" என்று. அவாப்த ஸமஸ்தகாமனான எனக்கும் கிடைக்கமாட்டாததான வொரு ப்ரியவஸ்து கிடைத்தாற்போல் அநுபவிக்கிறேனென்று எம்பெருமான் சொல்லுவதாக பாஷ்யமுள்ளது. ஸம்ஸ்க்ருதஜ்ஞர்கள் அவ்விடத்து பாஷ்யபங்க்தியையெடுத்து ஸேவித்தால் கண்ணநீரைப் பெருக்காமலிருக்க முடியாது. அணுவையும் அமிதமாகக் கொள்ளும் பரிசு தனக்குள்ளதென்பதைக் கண்ணபிரான் இங்கு [குசேல கதையில்] மேலே வெகு ரஸமாகக் காட்டுகிறான். குசேலரை நோக்கிக் கண்ணன் இங்ஙனே சொல்லச் செய்தேயும் அவர் வெட்கத்தினால் அவலைக் கொடுக்கவேயில்லை. கண்ணன் தானாகவே அவருடைய சதச்சித்ரமான உத்தரீய முடிப்பைப் பிடித்திழுக்க, சில அவல்துளிகளே கைப்பட்டனவாம். ஆனாலும் "அண்வபி பூர்யேவ மே பவேத்" என்று கீழே சொன்னது ப்ரத்யக்ஷமாக வேணுமே; அதற்காக, அந்த அவல் கணங்களும் கண்ணன் கைப்பற்றினவாறே முஷ்டியளவாக ஆயிற்றாம். அதை அமுதுசெய்ய, அவ்வளவிலும் அது ஓய்ந்ததில்லை; மற்றொரு முஷ்டியாகவும் பெருகிற்றாம். இவ்வதிசயம் (ஸ்ரீபாகவதத்தில்) "இதி முஷ்டிம் ஸக்ருஜ் ஜக்த்வா த்விதீயம் முஷ்டிமாததே." என்பதனால் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வளவு இட்டாலும் த்ருப்தி யடையாதே 'என்ன கொடுத்தாய்! உன்னைப் போன்ற க்ருபண சிரோமணியும் உலகிலுண்டோ?' என்று தூற்றும் நம்போல்வாரைப் போலன்றியே அல்பஸந்துஷ்டன் எம்பெருமான்—என்னும் இம்மஹாகுணத்தை எம்பெருமான் தன்னுடைய உக்திகளாலும் நடத்தைகளாலும் விளங்கக் காட்டிக்கொண்டிருப்பதை அஸூயையின்றிக்கே அநுபவிக்குங் குடியிலே ஜன்மாந்தர ஸஹஸ்ர நற்றவப்பயனாக நாம் பிறந்திருக்கிறோம். இத்தகைய மஹாகுணத்தை ஒருவர் எடுத்துரைத்தால் "கேசவனைப்பாடவும் நீ கேட்டேகிடத்தியோ" என்கிறபடியே ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுவது பக்தியுக்தர்களின் லக்ஷணம். கண்ணபிரான் அர்ஜுநனுக்கு கீதை முழுவதும் உபதேசித்து விட்டு முடிவில் "இதம் தே நாதபஸ்காய..."=நான் உனக்குச் சொன்ன இந்த பரமகுஹ்ய

மான சாஸ்த்ரத்தை அதபஸ்கனுக்குச் சொல்லாதே, அபக்தனுக்குச் சொல்லாதே, அசுச்ரூஷுவுக்குச் சொல்லாதே. என்னிடத்தில் அஸூயையுள்ளவனுக்குச் சொல்லாதேயென்று கட்டளையிடுகிறான்; இங்கு "ந ச மாம் யோப்யஸூயதி" என்ற விடத்திற்கு நம் பாஷ்யகாரர் பாஷ்யமிட்டருளுகிறார்; காணக் கண்ணாயிரம் வேண்டும்; கேட்கக் காதாயிரம் வேண்டும்; நவில நாவாயிரம் வேண்டும்; 'என்னுடைய ஸ்வரூபத்தையும் என்னுடைய ஐச்வர்யத்தையும் என்னுடைய குணங்களையும் ஒருவர் எடுத்துரைத்தால் அவற்றில் தோஷாவிஷ்கரணம் செய்பவனே என்னிடத்தில் அஸூயை கொண்டவன்; அவனுக்கு நீ ஒன்றும் சொல்லாதே. என்று கண்ணபிரான் கட்டளை யிடுவதாக ஸ்வாமி பாஷ்யம் செய்தருளுகிறார். பகவத் குண கீர்த்தனம் பண்ணினால் அதில் தோஷாவிஷ்கரணம் செய்பவர் யார்? "கேட்பார் செவி சுடு கீழ்மை வசவுகளே வையும் சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன்" என்று நம்மாழ்வாரால் விசேஷிக்கப் பெற்ற சிசுபாலன் போல்வார்—என்று இதுவரையில் எண்ணியிருந்தோம். அது தவறு; எம்பெருமானார் தர்சனத்திலேயே ஜனித்து, எம்பெருமானை அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணைகதானனென்றும் இசைந்து வைத்து, "நம் போல்வாரிடத்து நம: என்கிற உக்தி மாத்ர முண்டானாலும் அது எம்பெருமானுக்கு பூயிஷ்டமாகிறது" என்று இந்த மஹாகுணத்தைச் சொன்னவாறே கண்கள் சிவந்து தாபம் மிகுந்து விவாத யுத்தஸந்நத்தர்களாகின்றார்களே சில மஹாநுபாவர்கள். அவர்களே *மத்குணேஷு கதிதேஷு தோஷமாவிஷ்கரோதி யென்ற எம்பெருமானார் திவ்ய ஸூக்திக்கு இலக்கானவர்களென்று திண்ணமாக எண்ணத்தட்டுண்டோ?

"பூயிஷ்டாம் தே நமஉக்திம் விதேம." என்கிற வாக்யம் ஈசாவாஸ்யாதிகளான உபநிஷத்துக்களில் உள்ளதாகையாலும் தேசிகாதிகளால் பகவத் பரமாகவே வ்யாக்க்யாத மாகையாலும்இது எம்பெருமானைப் பற்றியதன்றென்று வாய்திறக்க வழியில்லை. 'தே பூயிஷ்டாம் நம உக்திம்' என்று அந்வயித்து, நம: என்கிற உக்தி மாத்ரமும் அவன் திருவுள்ளத்தாலே கனத்ததாகிறது என்று அர்த்தம் செய்தால் இது எம்பெருமானுக்குப் பெருந்தாத குணமென்று சொல்லமுடியுமா? சப்தசக்தியால் லப்யமாகாது என்ன முடியுமா? எதுவும் முடியாது. எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கும் இயல்பிற்கும் மிக விணங்கினதாய் பகவத் குணதிசய குதூஹலிகளுக்குப் பரமானந்த ஸந்தோஹ ஸந்தாயகமாய் சப்தஸ்வரஸத: ப்ராப்தமுமாயிருக்கின்ற இந்த மஹார்த்தம் நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகளுள் மஹாநிதியானது. இதனைப் பல பகவத் கதைகள் நன்கு நிரூபிக்கின்றன. குசேல கதை கேட்டீர்கள்; விதுரகதையும் கேண்மின்.

4. கண்ணனும் விதுரனும்

பாண்டவர்க்காய்த் தூதுசென்ற கண்ணபிரான் விதுரர் திருமாளிகையிலே புக்கவாறே "முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ. பன்னகாதிபப்பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ கருதி நீ யெய்தற்கு, என்ன மாதவம் செய்ததிச் சிறுகுடிலென்றான்" (வில்லிபாரதம்) என்றபடி பலவிதமாக நைச்யாநுஸந்தானம் செய்து விதுரர் கண்ணனுக்கு ஏதோவுண்ணக் கொடுத்தார். கண்ணனும் அதனைப் பரமானந்தமாகவுண்டான் என்று உலகம் சொல்லி வருகிறது. இவ்விடத்தை மஹாபாரதத்தில் எழுதுகின்ற வ்யாஸபகவான் எங்ஙனே யெழுதினரென்று சிறிது பார்ப்போம். விதுரர் அன்னமிட்டாரென்பதைச் சொல்லுமிடத்து "விதுரோந்நமுபாஹரத்" என்று சொன்ன வியாஸர், கண்ணன் அதனை யமுது செய்தானென்பதைச் சொல்லுமிடத்து "விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச" என்றார். "அப்திர் லங்கித ஏவ வாநரபடை:" என்ற ரீதியிலே நின்று புராணப்ரஸங்கம் செய்து போருமவர்கள் 'விதுரர் அன்னமிட்டார்; அது பரம பரிசுத்தமாயும் பரம போக்யமாயு மிருந்தபடியாலே அதனைக் கண்ணனமுது செய்தான்' என்றிவ்வளவே

சொல்லிப் போவார்கள். விதுரர் அன்னமிட்டாரென்பதைச் சொல்லும்போது "அந்நம் உபாஹரத்" என்று ஏகவசந ப்ரயோகம் செய்த முனிவர் உடனே கண்ண னமுதுசெய்ததைச் சொல்லுமிடத்து 'அந்நாநி புபுஜே' என்று பஹுவசநப்ர யோகம் செய்ததேன்? என்று ஆராய்ந்து நிதியெடுத்து ஊட்டவல்லவர்கள் மிகச் சிலரே. விதுரர் அன்னமிட்டபோது அது மிகவும் அல்பமாயிருந்ததென்பதைக் காட்ட அங்கு ஏகவசநப்ரயோகம் பண்ணினர். அதுதானே 'அண்வபி ப்ரேம்ணு பூர்யேவ மே பவேத்" என்ற கண்ணபிரானுடைய திருக்கைத் தலத்தில் சேர்ந்த வாறே அநல்பமாய் விட்டதென்பதைக் காட்ட அங்கு 'அந்நாநி புபுஜே' என்று பஹுவசநப்ரயோகம் பண்ணினர்—என்று மருமமறிந்து எடுத்துரைக்க வல்லவர்கள் யாராயிருக்க வேண்டும்? பகவத்குணஸாகரத்தில் நன்கு படிந்தவர்களாய் பகவா னுடைய விசேஷ கடாக்ஷத்திற்குப் பாத்ரபூதர்களாய் அவனுடைய திருக்குணங் களையே ஜ்வரஸந்நிபதிதரைப் போலே வாய் வெருவுமவர்களாயிருக்க வேண்டும்.

"இக்கருத்தை யுட்கொண்டுதான் வியாஸர் சுலோகமியற்றினரோ? ஏதோ ச்லோகம் கூடுகிறபடி சொல்லி வைத்தார்; அதற்கு இப்படி விசேஷார்த்தம் சொல்லு வது குநிஷ்டை" என்று ஸஹஸா சொல்லிவிட வல்லவர்கள் எங்கும் பரம்பியுள்ளார் களென்பதை நாமறிவோம். 'விதுரோந்நமுபாஹரத்' என்றதற்குப் பொருந்த 'புபுஜே விதுராந்நம் தத்' என்று ச்லோகமியற்ற அருமையில்லை. "ஜாமாதா வேத்தி நோ பிதா.......வ்யாக்க்யாதா வேத்தி நோ கவி:" என்ற கணக்கிலே வ்யாஸர் இவ் விசேஷப்பொருளைக் கருதிற்றிலர் என்றே கொண்டாலும் இந்த இன்சுவைப் பொரு ளைக் கொள்ளக் குறைவில்லாதபடியன்றோ வசநஸந்தர்ப்பம் அமைந்திருக்கின்றது. பகவானுடைய ஆச்சரியமான குணவிசேஷமன்றோ குன்றிலிட்ட விளக்காகின்றது இப்பொருட்சுவையில்.

"கண்காணநிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற் ருதபடி நின்று" (ஸ்ரீவசநபூஷணம்) என்கிறபடியே கட்கிலியான எம்பெருமானை நாம் ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து ஆனந்திக்க பாக்கியம் பண்ணிற்றிலோம். "கோவிந் தன் குணம்பாடி ஆவிகாத்திருப்பேனே" என்று ஆண்டாளருளிச் செய்த கட்டளை யிலே குணாநுபவம் பண்ணிப் போதுபோக்க நிற்கிறோ மத்தனை. இந்த குணகீர்த் தனமும் எம்பெருமானார் தர்சனஸ்தர்களுக்கும் சிலர்க்கு அஸஹ்யமாகிற தென்றால் இதனில் மிக்கோர் வியப்புண்டோ? பக்தனிட்ட அல்பமான அன்னம் ஸ்வீகர்த் தாவின் திருவுள்ளத்தால் அநல்பமாயிற்று என்று ஒரு குணரஸிகர் உபந்யஸித்தால் இதில் அநுபபத்திகளைக் கூற வழிதேடுவாருளரோ? *தே பூயிஷ்டாம் நமஉக்திம்* என்னுமந்வயத்தைப் பழிக்கப்பார்க்குமவர்கள் இங்கு வாளாவிருப்பர்களோ? 'நாம் கனக்க இட்டாலுங் கூட அதில் குற்றங்குறைகண்டு தள்ளுகிறவனன்றோ பகவான்' என்பதையே ரஸகநமாகக் கொண்டு இதனையே சிஷ்ய கோஷ்டிகளுக்கு ப்ரவசனம் செய்து க்ருதக்ருத்யராமவர்களை நிரோதிப்பாராருமிலரே. .... (4)

5. " பங்கதிக்தஸ்து ஜடிலோ பரத :—"

ஸ்ரீராமாயண வியாக்கியானங்களுள் ஸ்ரீகோவிந்தராஜீயம் மிகச் சிறந்த வியாக்கியானமாகக் குலாவப்படுகிறது. ஸ்மார்த்த மாத்வப்ரப்ருதிகளும் இந்த வியாக் கியானத்தை மெச்சுகிறார்களென்று தெரியவருகிறது. கோவிந்தராஜர் என்னும் பெரியார் செய்த வியாக்கியானமாதலால் கோவிந்தராஜீய மென்று பேர் பெற்றிருக்கிறது. சில விடங்களில் இவர் பூருவர்களின் வியாக்கியான ஸர ணியை மறந்து வேறாக வியாக்கியை செய்திருப்பது முண்டென்று அடியேனுடைய ஆராய்ச்சியில் தோன்றியதைச் சிறிது விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். இதனால் கோவிந்தராஜீயத்திற்கு ஒரு மறுப்பு எழுதுவதாக ஒருவருமெண்ணத் தகாது.

பெருமாள் இராவணஸம்ஹாரம் செய்து தலைக் கட்டிப் புஷ்பகவிமானத்தில் திருவயோத்திக்கு மீண்டெழுந்தருளும்போது பரத்வாஜருடைய ஆச்ரமத்தில் ஆதித்த்யம் ஸ்வீகரிக்கத் தங்கினரன்றே. அப்போது பரதாழ்வானுடைய நிலைமையை பரத்வாஜ முனிவர் கூறுகின்றார்—“ பங்கதிக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே ” என்று. இங்கு பரதாழ்வானுக்கு பங்கதிக்த: என்று விசேஷணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சேறு பூசப்பெற்றவன் என்றபடி. பரதாழ்வான் எதனாலே சேறு படிந்தவனானென்று ஜிஜ்ஞாஸை பிறக்குமே; இதற்கு கோவிந்தராஜர் இரண்டு வகையாக எழுதியுள்ளார். பரதாழ்வான் சடை புனைந்திருப்பதனால் ஸ்நானம் செய்வதே கிடையாது. அதனால் உடம்பெல்லாம் புழுதியேறிக் கிடக்கிறது. * கதம் நு அபரராத்ரேஷு ஸரயூமவகாஹதே * என்கிற லக்ஷ்மணவசனத்தில் பாதாழ்வான் ஸரயுவிலிறங்கி ஸ்நானம் செய்வதாகத் தெரியவருகிறதே யென்னில், அது நித்ய ஸ்நானபரமன்று; கதாசித் செய்யப்படுகிற நைமித்திக ஸ்நானத்தைச் சொன்னதாகலாம்—என்பது முதல் வகை. இனி இரண்டாம் வகையாவது - பரதாழ்வான் மண்தரையிலேயே சயனிப்பவனாகையாலே சேறுபடிந்த மேனியனாயினன் என்பதாம்.

பரதாழ்வான் நாடோறும் த்ரிஷவணஸ்நானமும் செய்திருக்கக்கூடும்; நித்யஸ்நானமும் செய்யாதிருந்தனன் என்பதை யாவரும் த்ருப்தியுடன் அங்கீகரிப்பர்களாவென்று ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. தரைக்கிடை கிடப்பதனால் ‘பாம்ஸுதிக்த:’ என்று சொல்லத் தகுமேயொழிய பங்கதிக்த: என்று சொல்ல ஔசித்யமிருக்குமாவென்பதும் ஆலோசிக்கத் தக்கது. * கங்குலும் பகலும் கண்துயிலறியாள் கண்ணநீர் கைகளாலிறைக்கும் * என்னும்படியான நிலைமையே பரதாழ்வானுடைய நிலைமையாதலால் அருவி சோருங்கண்ணீரைப் பெருக்கித் தரைக்கிடை கிடப்பதனால் சேறுபடிந்த மேனியனாகிறான். ஸ்ரீ குலசேகராழ்வார் * ஏறடர்த்ததுமேனமாய் நிலங்கீண்டதும் * என்ற பாட்டில் * வண் பொன்னிப் பேராறு போல் வருங் கண்ணநீர் கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர் * என்றருளிச் செய்திருக்கிறார். அப்பாசுரத்திற்கும் பங்கதிக்தஃ என்பதற்கும் ஒரு சேர்த்தியிருப்பதாகப் பூருவர்கள் திருவுள்ளம் பற்றுகிறார்கள். அது ஆசார்யஹ்ருதயத்தில் (127ல்) வ்யக்தம்.

ப்ரஸங்காத் ஸ்ரீகோவிந்தராஜரைப்பற்றிச் சிலவார்த்தைகள் சொல்லுகிறேனிங்கு. இவருடைய காலம் ஐந்நூறு வருஷங்களுக்குக் கீழ்ப்பட்டது; மணவாளமாமுனிகளுக்குப் பிற்பட்டவர். பெரியவாச்சானபிள்ளையின் வியாக்கியானங்களையும் ஈடு முப்பத்தாறாயிரப்படியையும் மணவாளமாமுனிகளின் ரஹஸ்ய வியாக்கியானங்களையும் நன்றாக ஸேவித்தவர். அவற்றிலுள்ள இன்சுவைப் பொருள்களை அப்படியப்படியே ஸம்ஸ்க்ருதப்படுத்தியுள்ளார். இதைத் தாமே தம்முடைய வியாக்கியான உபக்ரமத்தில் “ பூர்வாசார்யக்ருதப்ரபந்த ஜலதேஸ் தாத்பர்ய ரத்நாவலீஃ க்ராஹம் க்ராஹமஹம் ” என்கிற ச்லோகத்தினால் வெளியிட்டிருக்கிறார். அயோத்யா காண்டம் 113 ஆம் ஸர்க்கம் 18, 19-ஆம் ச்லோகங்களின் வியாக்கியானத்திலும் மற்றும் சில விடங்களிலும் இவர் தம்மை ஸ்ரீமத் வரவரமுனி ஸம்ப்ரதாயஸ்தராக விளங்கக் காட்டிக் கொண்டவர். அது நிற்க, இவருடைய வியாக்கியானத்தில் பெரிய வாச்சான்பிள்ளை முதலானாருடைய ஸ்ரீஸூக்திகளை மொழி பெயர்த்து எழுதியுள்ள பாகங்களில் [விஷயத்தை க்ரஹிக்கமாட்டாத முத்ராபகர்களால்] அச்சுத்தவறுகள் ஏறியிருக்கின்றன. அத்தவறுகள் எல்லாப் பதிப்புகளிலும் ஒரே ரீதியாகவே யிருக்கிறது. ஓரிடம் காட்டுகிறேனிங்கு; திருப்பாவை (2) *பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்* என்றவிடத்து ஆறாயிரப்படியில் “ [கௌஸல்யா ஸுப்ரஜாராம !] உண்ணப்புக்கு வாயை மறப்பாரைப் போலே, வந்த காரியத்தை மறந்தான்; ஒரு திருவாட்டி பிள்ளை பெறும்படியே! என்கிறான் ” என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. இந்த பங்க்திகளை மொழிபெயர்த்த கோவிந்தராஜர் (பால-23-2.) “போஜநகாலே விஸ்ம்ருதமுகோ முநிராஸீத்”

என்று எழுதிவைத்தார். 'உண்ணப்புக்கு வாயை மறப்பாரைப் போலே' என்ற தமிழ்வாக்கியத்திற்கு நேரான ப்ரதிச்சந்தமிது. உண்பதற்கு உட்கார்ந்தவன் இலையிலுள்ள பக்ஷ்யவர்க்கங்களை யெடுத்து உண்ணவேண்டியிருக்க அதைவிட்டு, அந்த பக்ஷ்யங்களின் ஸௌஷ்டவாதிகளை வர்ணித்துக் கொண்டு கிடப்பதுமுண்டு. அப்படியே விச்வாமித்ரனும் தன் வேள்வியை மறந்து * என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்!* என்று பெற்றவளைக் கொண்டாடத் தொடங்கிவிட்டானென்று ஆசாரியர்களின் வியாக்கியானம். அதை மொழிபெயர்த்த விதில் (போஜநகாலே) என்பதும் (விஸ்ம்ருதமுக:) என்பதும் அருளிச்செயல் வியாக்கியானச் சுவடறியாதார்க்குப் பொருள் படாமையினாலே, பொழுது விடியும் போது போஜநப்ரஸக்தி ஏதென்று மயங்கி "போதநகாலே விஸ்மித முக:" என்று திருத்தி விட்டார்கள். இத்தகைய விஷயங்கள் பலவுள. .... *

6. கீதாபாஷ்யமும்—தாத்பர்யசந்த்ரிகையும்

இக்காலத்தில் பகவத் கீதையின் அருமையை யறியாதார் இல்லை. எந்த மதத்தினரும் கீதையில் விசேஷமான ஆதரவு காட்டுகிறார்கள். பலர் தங்கள் சொக்காய் ஜேப்பியிலேயே கீதையை ஸதா வைத்துக்கொண்டிருப்பதையும் பார்க்கின்றோம். எழுதக் கற்றவர்கள் பெரும்பாலும் கீதைக்கு வியாக்கியான மெழுதியே க்ருதக்ருத்யர்களாகிறார்கள். தற்காலம் உலகில் எத்தனை பாஷைகள் நடையாடுகின்றனவோ அத்தனை பாஷைகளிலும் கீதைக்குப் பல்லாயிரக் கணக்கில் வியாக்கியானங்கள் தோன்றியிருப்பதாக விமர்சகுசலர்கள் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு பாஷையிலும் உள்ள வியாக்கியானங்கள் எண்ணிறந்தவை என்கிறார்கள். பிற்காலத்தவர்கள் எழுதிய வியாக்கியானங்கள் கிடக்கட்டும். புராதனர்களாய் வைதிகர்களென்று கொண்டாடப்பட்டவர்களான ஆதிசங்கராசார்ய ஸ்வாமி போன்ற மஹான்களால் இயற்றப்பட்ட வியாக்கியானங்களும் பல இருப்பதாகத் தெரிகிறது. அவற்றுள் 'மதத்ரய பாஷ்யம்' என்று குலாவப்படுவன சங்கரபாஷ்யமும் ராமாநுஜ பாஷ்யமும் மத்வ பாஷ்யமுமாகும். இம்மூன்று பாஷ்யங்களும் டீகைகளோடுங்கூட ஒன்று சேர்த்து தேவநாகரலிபியில் பல வருஷங்களுக்கு முன்பு சென்னை ஆனந்தா அச்சுக்கூடத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டிருப்பதால் இவற்றை ஏககாலத்தில் அநுபவிக்க விரும்புமவர்களுக்கு வெகு ஸௌகரிய முண்டாகி யிருக்கின்றது.

இவற்றுள் மத்வாசார்யருடைய பாஷ்யம் மிகவும் சுருக்கமாகவுள்ளது. அவருடைய ப்ரஹ்மஸூத்ர பாஷ்யமே அதிஸம்க்ஷிப்த மென்னும்போது கீதாபாஷ்யத்தைப்பற்றிச் சொல்லவேண்டாவே. இம்மஹாசார்யர் பல பல அபூர்வமான உபநிஷத் ப்ரமாணங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறாரென்பது இவருடைய பாஷ்யத்திற்குள்ள விசேஷமாகும். சங்கரபாஷ்யத்தின் பெருமை உலகறிந்ததே.

பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை அநுபவிக்க அநுபவிக்க, அதனுடைய அருமை பெருமைகள் 'நெஞ்சால் நினைப்பரிதால்' என்ன வேண்டியதாகிறது. நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கு கீதாபாஷ்யம் ஒரு சிறந்த மஹாநிதி யென்றே சொல்ல வேண்டும். இதற்கு வேதாந்த தேசிகனுடைய டீகையான தாத்பர்ய சந்த்ரிகை அவதரிக்க வில்லையாகில் இது அவதரித்தும் நிஷ்ப்பலமே யென்று சொல்ல வேண்டியதாகும். தேசிகனுடைய ஸகல க்ரந்தங்களுக்குள்ளும் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை தனிப்பட்ட பெருமைவாய்ந்த தென்றால் இது மிகையாகாது. கீதாபாஷ்யத்திற்கு அந்யூநாநதிரிக்தமான டீகையன்றோ தாத்பர்ய சந்த்ரிகை. பாஷ்யத்தின் அருமை பெருமைகளை இந்த டீகையினாலேயே அறியவேண்டியதாகிறது. மூலத்திற்கு ஸம்பந்தப்படாமல் ஸ்வதந்திரமாகப் பல விஷயங்களை வளர்த்தி க்ரந்தத்தைப் பெருக்குகிற முறை இதில் அடியோடு கிடையாது. அபேக்ஷித விஷயங்களை

விடாமலும் அநபேக்ஷித விஷயங்களைத் தொடாமலும் அற்புதமாக எழுதப்பட்டதுகையன்றோ இது. கீதா பாஷ்யத்திலும் இந்த சந்த்ரிகையிலுமுள்ள ரஸகனமான விசேஷங்களை வரிசையாக வெடுத்துக்காட்டி அபூர்வமான வியாஸங்களை யெழுதி உபகரிக்கவல்ல மஹான்களுக்கு பரிச்ரமத்திற்குத் தக்க பரிசு அளிக்க வேணுமென்றும் நாம் குதூஹலம் கொண்டிருக்கிறோம். அன்னவர்களுக்கு வழிகாட்டியாக ஒரு விஷயமிங்கெடுத்துக் காட்டுகிறோம். இந்தவகையில் அவர்கள் எழுதவேண்டுமென்று)

கீதை பத்தாவது அத்யாயத்தில் பத்தாவது ச்லோகம்—

"தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம்,
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே" என்பது.

இங்கு 'பஜதாம் ப்ரீதி பூர்வகம்' என்பதற்கு எப்படிப்பட்ட பண்டிதர்களுடைய புத்தியிலும் 'ப்ரீதி பூர்வகம் பஜதாம்' என்கிற அந்வயம் தோன்றுமே யொழிய வேறுவிதமான அந்வயம் தோன்றவே மாட்டாது. பஜிப்பதாவது வந்தடைவது; வந்தடைகிறவர்களெல்லாருமே ப்ரீதியோடு வந்தடைகிறார்களென்று சொல்ல முடியாது. அப்ரீதியோடு வந்தடைபவர்களும் இருக்கக் கூடுமாதலால் அப்படிப்பட்டவர்களை வ்யாவர்த்திக்கைக்காக 'ப்ரீதிபூர்வகம் பஜதாம்' என்று சொல்லிற்று—என்பதாகப் பொருள் கூறவல்ல பண்டிதர்களே எங்கும் நிறைந்துள்ளார்கள். சங்கராசார்ய ஸ்வாமிகளின் பாஷ்யத்திலும் 'ப்ரீதி பூர்வகம் பஜதாம்' என்கிற அந்வயந்தான் காட்டப்பட்டது. 'ஸ்நேஹத்தோடு பஜிக்கின்றவர்களுக்கு என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

ஸ்வாமி ராமாநுஜரோ வென்னில்; அப்பொருளைக் கண்டனம் செய்யாமலும் அப்படிப் பொருள் கொள்ளுகிற விதம் ஒன்றிருப்பதாகக் கூடக் காட்டிக் கொள்ளாமலும் "தமேவ புத்தியோகம் ப்ரீதிபூர்வகம் ததாமி" என்று ஆச்சரியமான அந்வயக்ரமத்தைக் காட்டி பாஷ்ய மிட்டருளினர். பூர்வார்த்தத்திலுள்ள பதத்தை உத்தரார்த்தத்தில் அந்வயிப்பதென்பது அஸம்பாவிதமுமன்று. அபூர்வமுமன்று. "பஜதாம் ப்ரீதி பூர்வகம் ததாமி" என்று ஸ்வாமி அந்வயித்த விது அதிசயிக்கக் கூடியதன்று, ஆச்சரியப்படக் கூடியதன்று. ஆனாலும் இங்ஙனே யந்வயம் வித்வான்களுக்கும் ஸ்புரிக்க மாட்டாது. 'பஜதாம் ப்ரீதிபூர்வகம்' என்று பூர்வார்த்தம் முடிந்தபடியாலே 'ப்ரீதி பூர்வகம் பஜதாம்' என்கிற அந்வயமே யாவர்க்கும் ஸ்வரஸமாகத் தோன்றக்கூடியது. கீழே ஒன்பதாமத்யாயத்தில் (29) *ஸமோஹம் ஸர்வபூதேஷு* என்ற ச்லோகத்தில், "யே பஜந்தி து மாம் பக்த்யா" என்ற விடத்தில் 'பக்த்யா பஜந்தி என்றிருப்பதனாலே அங்குப் போலவே இங்கும் 'ப்ரீதிபூர்வகம் பஜதாம்' என்றிருப்பது யுக்தந்தானென்று க்ரஹிப்பதற்கே பண்டிதர்கள் ஸஜ்ஜர்களாயிருக்கிறார்கள். சங்கராசார்ய ஸ்வாமிகளும் அப்படித் தானே க்ரஹித்தார்கள். ஸ்வாமி யெம்பெருமானருடைய மேதை விலக்ஷணமாக ப்ரஸரித்தது. ப்ரீதிபூர்வகம் என்பதை பக்தர்களின் க்ரியையில் அந்வயிப்பதைவிட எம்பெருமானுடைய க்ரியையிலே அந்வயிப்பது ரஸவத்தரம் என்பது தோன்றவே அப்படி அந்வயித்து பாஷ்ய மிட்டருளினர்.

மஹாஜ்ஞாநநிதியான சங்கராசார்ய ஸ்வாமிகள் காட்டியிருக்கிற அந்வயத்தைத் தள்ளி இங்ஙனே விலக்ஷணந்வயம் காட்டினதால் என்ன லாபம் கிடைக்கிறதென்று கௌதஸ்குதர்கள் கேட்கக்கூடுமே. இதற்கு நம்போல்வாரால் என்ன விடை கூற முடியும்? ஸாமாந்யமாக கீதாபாஷ்யத்தை ஸேவித்துக் கொண்டு போமவர்கள், 'இங்குப் பிறர்களின் அந்வயக்ரமம் வேறு; ஸ்வாமியின் அந்வயக்ரமம் வேறு' என்பதைக் கூட க்ரஹிப்பதில்லை. சிலர் க்ரஹித்தாலும் இதிலுள்ள ரஸ விசேஷம் இன்ன தென்பதை அடியோடு க்ரஹிக்க சக்தராவதில்லை.

இவ்விடத்தில் ஸ்வாமி தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில் நிதியெடுத்துக் கொடுத்தருளுகிறார். சங்கராசார்யஸ்வாமிகள் 'ப்ரீதி பூர்வகம் பஜதாம்' என்று அந்வயித்திருக்கவும் ஸ்வாமி இப்படி விலக்ஷணாந்வயம் செய்தருளி யிருப்பதற்கு யாது காரணம்? இதில் என்ன விசேஷம்? என்று ஆராய்ந்தார் தேசிகன். ஆராய்ச்சியில் தேறினதை அழகாக எழுதி வைத்திருக்கிறார். "ப்ரீதி பூர்வக மித்யஸ்ய பஜநாந்வயே ப்ரயோஜநம் மந்தம்; ததாமீத்யநேந அந்வயேது..........பரமோதாரத்வாதி பகவத் குண கண ப்ரகாசநேந மஹத் ப்ரயோஜந மித்யபிப்ராயேண ப்ரீதிபூர்வகம் ததாமீதி அந்வய உக்தः" என்பன சந்த்ரிகா ஸ்ரீஸூக்திகள். இதனால் தெரிவிக்கப்படுகிறதென்ன வென்றால், (ப்ரீதி பூர்வகம் பஜதாம்) என்று அந்வயிப்பதில் அநுபபத்தியொன்றும் சொல்ல முடியாது; ஆனால் அவ்வந்வயத்திற் காட்டிலும் ப்ரீதி பூர்வகம் ததாமி யென்னுமந்வயத்தில் அதிசயித்த ப்ரயோஜனமுள்ளது. அதாவது எம்பெருமானு டைய பரமோதாரத்வம் முதலான திருக்குணங்களை வெளியிடுவதுதான்—என்ற தாயிற்று. உலகத்தில் தானம் செய்பவர்கள் வெறுப்புடனும் அழுகையுடனும் கொடுப்பது முண்டாகையால் எம்பெருமான் அப்படி கொடுப்பவனல்லன்: ஸத்பாத் ரத்தில கொடுக்கப்பெற்றோமே! என்று உள்ளம் பூரித்துக் கொண்டே கொடுப்பவன்- என்று இப்படிப்பட்ட மஹா குணம் இவ்வந்வயத்தில் தேறுகையாலே இதுதான் ஆதரிக்கத்தக்க அந்வயம் என்று காட்டியருளினாராயிற்று.

ஸ்வாமி பாஷ்யகாரர் 'ப்ரீதிபூர்வகம் ததாமி' என்று அந்வயித்ததற்கு முக்கிய மான காரணம் நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தியேயாகும். திருவாய்மொழியில் (8-7-5) * அறியேன் மற்றருள் * என்றபாட்டில் "அருள்செய்வர் செய்வார்கட்கு உகந்து" என்றுள்ளது. எம்பெருமான் தானருள் செய்ய நினைத்தவர்கட்கு உகந்து அருள் செய்வதாக ஆழ்வாரருளிச் செய்ததற்கு இணங்கியிருக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றியே ஸ்வாமி விலக்ஷணாந்வயம் காட்டியருளினாரென்பதை ஸம்ப்ரதாய பரம்பரை யிற் படிந்து கேட்டு அறியவல்லார் சில பாக்யாதிகர்கள். இது நிற்க. தேசிகனுடைய டீகையிலிருந்து ஒரு ந்யாயசிக்ஷணமும் செய்யப்பட்டதாகிறது. அதாவது, எந்த அந்வயத்தில் பகவத் குணாதிசயம் விளங்குகிறதோ அந்த அந்வயந்தான் சிறந்ததாகக் கொள்ளத்தக்க தென்பதாம். நிர்க்குண ப்ரஹ்மவாதிகளான பிறர் எம்பெருமா னுக்கு ஒரு குணாதிசயம் தேற வேணுமென்று நெஞ்சாலும் நினைக்கமாட்டாதவர்களா கையாலே அவர்கள் ஸ்வகுல கூடஸ்தர் காட்டின அந்வயத்தையே (ப்ரீதி பூர்வகம் பஜதாம் என்பதையே) பற்றிக் கொண்டு மன்றாடுவர்கள். அவர்கள் அந்த அந்வயத் திற்கே பலம் கட்டக்'கடமைப்பட்டவர்கள். ப்ரீதி பூர்வகம் ததாமியென்னு மந்வயத் தில் ஸ்வாரஸ்யாதிசயமிருக்கிறதென்று எவ்வளவு காட்டினாலும் அவர்கள் ஈடுபடப் போகிறதில்லை. ஈடுபடாமை மாத்திரமேயன்று; ராமாநுஜர் தாந்தோன்றியாக அந்வயித்துப் பொருள் கூறினாரென்று தூஷிக்கவும் தலைப்படுவர்கள். சங்கரா சார்யர் காட்டின அந்வயக்ரமம் மந்த ப்ரயோஜநகம் என்றாவது, ராமாநுஜர் காட்டின அந்வயக்ரமம் ரஸவத்தரந்தானென்றாவது அவர்கள் ஒரு நாளும் இசையப் போகிற தில்லையன்றோ. ஆனாலும், பகவத் ராமாநுஜருடைய மேதை விலக்ஷணமேயென்று நெஞ்சினுள்ளே நினையாதிரார்கள். அவர்கள் அப்படி நினையா தொழியினும் நமக்கு ஒரு ஹானியுமில்லையன்றோ. [ப்ரஸங்காத் நினைவுக்கு வந்ததொன்று சொல்லக் கேண்மின்.]

இவ்வண்ணமாகவே * பூயிஷ்டாம் தே நமஉக்திம் விதேம * என்ற ச்ருதியிலும் 'பூயிஷ்டாம் நம உக்திம் தே விதேம' என்று காட்டு மந்வயம் அதுஷ்டமேயாகிலும் மந்தப்ரயோஜநகம்: தே பூயிஷ்டாமென்று கொள்ளுமந்வயத்தில் பகவத்குணாதிசயப்ர காசநேந ப்ரயோஜநாதிசயமுண்டு. பகவத் குணாதிசய அஸஹிஷ்ணுக்களுக்கு இவ்வந்வயம் ரஸிக்க விரகில்லை. அல்பத்தையும் அநல்பமாக நினைத்தருள்பவன் எம்பெருமானென்று தேறுவதே இங்கு குணாதிசயம். 6

7. ஸம்ப்ரதாய ஸங்கேதங்களின் விவரணம்

நம்முடைய பூருவாசாரியர்கள் கம்பீரமாகச் சில ஸ்ரீஸூக்திகளையருளிச் செய்து வைக்கின்றனர். அவை ஸங்கேதச் சொற்களாக வழங்குகின்றன. அவற்றின் பொருள்கள் ஆங்காங்கு வியாக்கியானங்களினால் தெரியவரும். அப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளில் சில காட்டி விவரிக்கிறோமிங்கு.

— பண்டை நாளில் பிறவி —

இதுவொரு ஸங்கேதமாய்ப் பரமபோக்யமான ஸ்ரீஸூக்தி. ஆசார்யஹ்ருதயத்தில் (81) "பண்டைநாளில் பிறவி உண்ணுட்டுத்தேசிறே" என்று வருகிறது. திருவாய்மொழியில் ஒன்பதாம்பத்தில் இரண்டாம்பதிகம் * பண்டைநாளாலே நின் திருவருளும்* என்று தொடங்குவது. அதில் முதல் மூன்று பாசுரங்களில் வரிசையாக ஒரு விலக்ஷண விஷயம் சொல்லப்படுகிறது. முதற்பாட்டில் "நின்கோயில் சீய்த்துப் பல்படிகால் குடி குடிவழிவந் தாட்செய்யுந் தொண்டர்" என்கிறது. இரண்டாம் பாட்டில் "உன் பொன்னடிக்கடவாதே வழிவருகின்றவடியர்" என்கிறது. மூன்றும் பாட்டில் "தொடர்ந்து குற்றேவல்செய்து தொல்லடிமை வழிவருந்தொண்டர்" என்கிறது. இவற்றால், ஆத்மாவின் இயற்கை வடிவமான தாஸ்யத்திற்கு விரோதியான அஹங்காரம் குடிபுகாததாய், கைங்கரியத்திற்கு அநுரூபமான குடிப்பிறவி இவ்வளவு விசதமாக வேறு எந்த பதிகத்திலுங் காணப்படவில்லை. இச்சிறப்பைத் திருவுள்ளம்பற்றிப் பூருவர்கள் "பண்டை நாளில் பிறவி" என்று ஒரு ஸங்கேதமிட்டனர். *பண்டை நாளாலே யென்கிற பதிகத்தில் பலகாலும் சிறப்பித்துக் கூறப்படுகிற பிறவி என்றபடி.

— ஐந்து நகர்கள் —

தென்னகர், நன்னகர், மாநகர், நீணகர், பெருநகர் என்று ஐந்து நகர்கள் ஆசார்ய ஹ்ருதயம் மூன்றும் ப்ரகரணத்தில் குறிக்கப்படுகின்றன. தென், நன், மா, நீள், பெரு என்று விசேஷணங்களில் பேதமொழிய, நகர் என்பதே ஐந்திடங்களிலும் விசேஷ்யம். மேலே குறித்த விசேஷணங்கள் பொதுவாகச் சிறப்பையே தெரிவிக்கும். எவ்வூருக்குத் தென்னகரென்று பெயர்? எவ்வூருக்கு மாநகரென்று பெயர்?... என்று கேட்டால் பாசுரங்களின் உபஸ்திதியும் விசேஷாநுபவமுமில்லாதவர்கள் விடையிறுக்க முடியாது.

(1) மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருவல்லவாழென்னும் திருப்பதியைப்பற்றி நம்மாழ்வாரருளிச்செய்த *மானேய்நோக்குப் பதிகத்தில் ஈற்றுப் பாசுரத்தில் "ஆயிரத்துள்ளிவைபத்தும் திருவல்லவாழ்ச் சேமங்கொள் தென்னகர்மேல்" என்றருளிச்செய்திருக்கையாலே திருவல்லவாழ்க்குத் தென்னகரென்று ஸங்கேதமிட்டனர்.

(2) ஒப்பிலியப்பன் ஸன்னிதியென்கிற திருவிண்ணகர்ப்பதிக்கு இட்டருளின திருவாய்மொழியில் (6:3-2)* தெண்டிரைப்புனல்சூழ் திருவிண்ணகர் நன்னகரே* என்றருளிச் செய்திருக்கையாலே திருவிண்ணகர்க்கு நன்னகரென்று ஸங்கேதமிட்டனர்.

(3) தென் திருப்பேரைத் திருப்பதிக்கு இட்டருளின *வெள்ளைச்சுரிசங்கு' பதிகத்தில் *ஏர்வளவொண்கழனிப் பழனத் தென் திருப்பேரெயில் மாநகரே* என்றருளிச் செய்திருக்கையாலே தென் திருப்பேரைக்கு மாநகரென்று ஸங்கேதமிட்டனர். (ஆசார்யஹ்ருதயகாரர்).

(4) திருவாறன் விளையென்னும் மலைநாட்டுத்திருப்பதிக்கு இட்டருளின *இன்பம் பயக்கவென்னும் பதிகத்தில் "திருவாறன்விளை யென்னும் நீணகரமதுவே" என்றருளிச் செய்திருக்கையாலே திருவாறன்விளைக்கு நீணகரென்று ஸங்கேதமிட்டனர்.

(5) சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான அப்பக்குடத்தான் ஸன்னிதிக்குத் திருமங்கையாழ்வாரிட்டருளின *கையிலங்காழி சங்கன்* என்னும் பதிகத்தில் *பெருவரை மதில்கள் சூழ்ந்த பெருநகர் அரவணைமேல்* என்றருளிச் செய்திருக்கையாலே அத்தலத்திற்குப் பெருநகரென்று ஸங்கேதமிட்டனர். ஆக இவ்வைந்து ஸங்கேதங்களும் மிக அற்புதமானவை.

— உறையிலிடாதவர் —

திருமழிசைப்பிரானுக்கு இதுவொரு ஸங்கேதத் திருநாமம். (ஆசார்யஹ்ரு—155.) எதை உறையிலிடாதவர்? என்று கேள்வி பிறக்கும். உறையிலிடுவதென்கிற வழக்கு கத்தியைப் பற்றியதாதலால், உருவின வாளை உறையிலிடாதவர் என்பதாகும். *வாள் வீசும் பரகாலன் கலிகன்றி* என்கிறபடியே திருமங்கையாழ்வார்க்குக் கத்தி நிரூபமாகவுண்டே யல்லது திருமழிசைப்பிரானுக்குக் கத்தியிருந்ததாக ப்ரஸித்தியில்லையே; ஆகவே உருவினவாளை உறையிலிடாதவரென்று திருமழிசைப்பிரானை எப்படிச் சொல்லலாம்? என்று சிலர் சங்கிக்கக்கூடும். 'உருவினவாளை உறையிலிடாதவர்' என்பதற்கு ஸ்வாப தேசார்த்தரீதியில் பொருள் கொள்ளவேணும். பிரதிபக்ஷிகளை நிரஸிப்பதற்காகவே கத்தியை உறையிலிடாமல் கையிலே கொண்டிருப்பது வீரர்களின் வழக்கம். அப்படியே, தேவதாந்தரங்களுக்குப் பரத்வஞ் சொல்லுகிற ப்ரதிபக்ஷிகளை நிரஸித்து ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை ஸ்தாபித்து வெற்றி பெறுவதற்கு எப்போதும் ஸந்நத்தராயிருப்பவர் இவ்வாழ்வார்—என்பது பற்றியே இவர்க்கு உறையிலிடாதவரென்று திருநாமஸங்கேதமாயிற்று. இவர் பிரபந்தம் தொடங்கும் போதே *நான்முகனை நாராயணன் படைத்தான்; நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்* என்றார். இடையில், *பொல்லாத தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு* (2434) என்றார். முடிவில் *இனியறிந்தே னீசற்கும் நான்முகற்குந் தெய்வம், இனியறிந்தே னெம்பெருமானுன்னை* என்றார். திருச்சந்த விருத்தத்திலுமிப்படியே பல பாசுரங்கள் காணலாம்: *காணிலு முருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும் வரந்தரமிடுக்கிலாத தேவரை, ஆணமென்றடைந்துவாழு மாதர்காள்!* என்றும், *வந்தவாணனீரைஞ்ஞூறு தோள்களைத் துணித்த நாள், அந்த வந்த வாகுலம் அமரரேயறிவரே* என்றுமுள்ள பல பாசுரங்கள் காண்க.

— புஷ்ப த்யாக போக மண்டபங்கள் —

'கோயில் திருமலை பெருமாள்கோயில்' என்ற மூன்று திவ்ய தேசங்களையே நூற்றெட்டுத் திருப்பதிகளுள் தலையாகக் கொண்டு எங்கும் வழங்கிவருகிறார்கள். இம்மூன்று திருப்பதிகட்குத் தலைமையுண்டானதற்கு யாது காரணமென்னில், நம்மாழ்வார் தமது முதற்பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் இம்மூன்று திவ்யதேசங்களை மாத்திரமே மங்களா சாஸனம் செய்தருளியதுதான் காரணம். இம்மூன்று திவ்ய தேசங்களைப் புஷ்ப த்யாக போகமண்டபங்களென்றும் பூருவர்கள் ஸங்கேதித்ததுண்டு. (ஆசார்யஹ்ரு—85.) புஷ்பமண்டபமென்பது திருமலை; த்யாக மண்டபமென்பது பெருமாள் கோயிலென்கிற காஞ்சி; போகமண்டபமென்பது கோயில். எங்ஙனேயென்னில்; நம்மாழ்வார் திருமலை விஷயமாக அருளிச்செய்த *ஒழிவில்காலப் பதிகத்தில்* வானவர் வானவர்கோனொடுஞ்சிந்து பூமகிழும் திருவேங்கடம்* என்று அருளிச் செய்திருக்கை

யாலே திருமலை புஷ்பமண்டப மெனப்பட்டது *வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ் ஸ்வயம், வரதஸ் ஸர்வ பூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே* என்கிற புராண வசனப்படியே வேண்டுவார் வேண்டின படியே தியாகம் செய்யும் வரதன் எழுந்தருளியிருக்குமிடமாகையாலே பெருமாள்கோயில் த்யாகமண்டபமெனப்பட்டது. *பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ்சோராமேயாள்கின்ற வெம்பெருமானுறையுமிடமான திருவரங்கம் பெரிய கோயிலானது *தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும்* என்கிறபடியே திவ்யபோக ஸ்தானமாயிருக்கையாலே போகமண்டப மெனப்பட்டது.

— தூது மொழிந்து நடந்து வந்தவர்கள் —

இது வொரு அற்புதமான ஸங்கேதம். இந்த ஸங்கேதங்களெல்லாம் ஆசார்ய ஹ்ருதயம் தவிர வேறு எந்த நூலில் இடம்பெறும்! திருமழிசைப்பிரான் தமது திருவந்தாதியில் "என்மதிக்கு விண்ணெல்லாமுண்டோவிலை" என்றார்; உண்மையில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாருடைய மதிக்கு உபய விபூதியும் விலையாகப் போராது. "தூது மொழிந்து நடந்து வந்தவர்கள்" என்னுமிந்த ஸ்ரீஸூக்தியிலே, தூது மொழிந்தவர், தூது நடந்தவர், தூது வந்தவர் என்று யோஜனை செய்து மூன்று வ்யக்தி விசேஷங்களைப் பொருளாக வுணரவேணும். தூது மொழிந்தவர்—சக்ரவர்த்தி திருமகனார். தூது நடந்தவர்—பாண்டவ தூதப்பெருமாள். தூது வந்தவர்—திருவடி. இந்த நிர்த்தேசங்கள் அருளிச்செயற் சந்தைகளிலிருந்து கொள்ளப்பட்டன. *மூன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து* என்கிற பாசுரத்தில் தூது மொழிந்தவராகச் சொல்லப் பெற்றுப் பிராட்டிக்குத் தூது மொழியைத் திருவடிவாயிலே சொல்லிவிட்டவர்—சக்ரவர்த்தி திருமகனார். தூது நடந்தவர்—"கோதில் செங்கோல் குடை மன்னரிடை நடந்த தூதா" என்கிற பாசுரத்தில் தூது நடந்தவராகச் சொல்லப்பட்டு பாண்டவர்க்குத் தூதுபோன கண்ணபிரான். தூது வந்தவர்—*ஓதமா கடலைக் கடந்தேறி ......தூது வந்த குரங்குக்கே* என்கிற பாசுரத்தில் தூது வந்தவராகச் சொல்லப்பெற்று "தூதோஹம் கோஸலேந்த்ரஸ்ய" என்று இலங்கையில் வந்து சேர்ந்தவர் திருவடி. ஆக, தூது மொழிந்தவரென்று இராம பிரானையும், தூது நடந்தவரென்று கண்ணபிரானையும் தூது வந்தவரென்று ஹனுமானையும் நிர்த்தேசிக்கப் பொருத்தமாயிற்று. இம்மூவரும் செய்த செய்கைகள் அடுத்த ஸங்கேத ஸ்ரீஸூக்தியில் காணத்தக்கன.

— ஸம்யக் ஸகுண ஸஹ போஜநம் —

ஸம்யக் போஜநம், ஸகுணபோஜநம், ஸஹபோஜநம் என்று யோஜித்து, மேலே நிர்த்தேசிக்கப்பட்ட மூவரும் மூன்றுவிதமான போஜனங்கள் செய்தமை கூறப்படுகின்றது. ஆசாரப்ரதாநரான பெருமாள் மதங்காச்ரமத்தில் சபரிபக்கலிலே எழுந்தருளினபோது அங்கு ஒரு விலக்ஷணமான போஜனம் செய்ததாக ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்படுமிடத்து *சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:* என்றார் வான்மீகி முனிவர். இது வொரு மருமமான வார்த்தை. 'சபர்யா ஸம்யக் பூஜித:' என்றதனால் தெரிவிக்கப்பட்ட ஸம்யக் போஜனத்தின் பரிசை ஆசார்ய ஸேவையில் பழுத்தவர்கள் அறியுமத்தனை. தூது மொழிந்தவர் ஸம்யக் போஜனம் பண்ணினமை சொல்லிற்றாயிற்று. இனி தூது நடந்தவனுடைய ஸகுண போஜனம் கேண்மின். பாண்டவர்களுக்காகத் தூது நடவாநின்ற கண்ணபிரான் விதுரர் திருமாளிகையேற எழுந்தருளி அங்குச் செய்தருளின போஜனத்தை முனிவர் சொல்லுமிடத்து "விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச" என்று சொல்லியிருக்கையாலே *குணவந்தி யென்பதில் நோக்காக ஸகுணபோஜன மெனப்பட்டது. தூது நடந்த

கண்ணன் செய்த ஸகுணபோஜனமிது. இனி, தூது வந்தவனுடைய ஸஹ போஜநம் நுட்பமாக அறியத்தக்கது. பெருமாள் திருவயோத்திக்கு மீண்டருளும் போது பரத்வாஜாச்ரமத்திலே தங்க வேண்டியதாயிற்று. அப்போது திருவடியை நந்திக்ராமத்திற்குச் செய்தி சொல்ல அனுப்பிவிட்டார் பெருமாள். அங்குச் சென்ற திருவடி மீண்டும் பெருமாளிடம் வந்ததாக வான்மீகத்திலில்லை. புராணாந்தரத்தில் திருவடி திரும்பி வந்ததாகவும், அப்போது பெருமாள் அமுது செய்து கொண்டிருந்ததாகவும், திருவடியையும் கூடக்கொண்டு ஓரிலையிலேயே அமுது செய்ததாகவும் கூறப்பட்டுளது. "உபகாராய ஸுக்ரீவோ ராஜ்யகாங்க்ஷீ விபீஷண:, நிஷ்காரணாய ஹநுமாந் தத்துல்யம் ஸஹ போஜநம்" என்கிற பிரமாண வசனமும் காட்டப்படுகிறது. பெரிய திருமொழியில் (5—8—2) *வாதமாமகன் மற்கடம் விலங்கு* என்ற பாசுரத்தின் நமது திவ்யார்த்த தீபிகையிலே இது பற்றின விரிவு காணத்தக்கது. ஆக, தூது மொழிந்தவருடைய ஸம்யக் போஜநமும், தூது நடந்தவருடைய ஸகுண போஜநமும், தூது வந்தவரோடே ஸஹபோஜநமும் சொல்லிற்றாயிற்று.

— ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் —

இதுவும் ஒரு விலக்ஷணமான ஸங்கேத ஸ்ரீஸூக்தி. ஐவரில் முற்பட்டவர், நால்வரில் முற்பட்டவர், மூவரில் முற்பட்டவர் என்று யோஜிக்க வேணும். ஐவரென்பது பஞ்சபாண்டவர்களை; அவர்களில் முற்பட்டவர் தருமபுத்திரர். நால்வரென்பது தசரதபுத்திரர்கள் நால்வரை; அவர்களில் முற்பட்டவர்—பெருமாள். மூவரென்பது—ஆளவந்தார் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸப்ரஹ்மசாரிகளாயும் உடையவர்க்கு ஆசாரியர்களாயும் பிரஸித்தர்களான பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, பெரிய திருமலை நம்பி என்று நம்பிகளென்று வியபதேசிக்கப்பட்டவர்களான மூவரை; இம்மூவரில் முற்பட்டவர் பெரியநம்பி. ஆக ஐவரில் முற்பட்ட தருமபுத்திரரும், நால்வரில் முற்பட்ட பெருமாளும், மூவரில் முற்பட்ட பெரிய நம்பியும் செய்தகாரியங்கள் எவையென்னில்; அவை "ஸந்தேஹியாமல் ஸஹஜரோடே புரோடாசமாகச் செய்த புத்ரக்ருத்யம்" என்ற அடுத்த ஸ்ரீஸூக்தியின் வியாக்கியானங் கொண்டு அறியத்தக்கன.

இங்ஙனே அற்புதமான ஸங்கேத ஸ்ரீஸூக்திகள் மலிந்தது ஆசார்ய ஹ்ருதய திவ்ய சாஸ்த்ரம். .... (7)


ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிவரும்

உபந்யாஸக ஸௌபாக்யத்தில் உபந்யாஸ ஸப்தகம்

முற்றுப்பெற்றது.

பெங்களூர் மகாநகரத்தில் உபந்யாஸ ப்ரவர்த்தக ஸமாஜம்



ஸ்ரீராமாநுஜன். 169 கிய இந்த ஸஞ்சிகை வெளிவருவதற்குச் சில காரணங்களினால் தாமதமேற்பட்டு விட்டது. 170 நெ. இந்த பிப்ரவரியிலேயே வெளிவரும்.

பதின்மர் பாடும் பெருமாள் !

திருவரங்கம் பெரிய கோயிலில் மார்கழித் திருவத்யயன மஹோத்ஸவத்தில் அரையர் ஸேவை யென்பது மிகமிக வதிசயம் பெற்றது. சில சில பாசுரங்களின் பொருள்களை 'அபிநயத்தால் காட்டுவது, வியாக்கியான பங்க்திகளைச் செவிக்கினிதாக ஸேவிப்பது, பாசுரங்களைத் தாளமிட்டு இசைபாடுவது....ஆக இத்தகைய ப்ரகாரங்கள் தவிர,

மண்டல மெல்லாம் விளங்கவே மாணுருவாய் மாவலியை
வஞ்சித்து நெஞ்சுருக்கி மண்ணளந்த பெருமாள் !
தெண்டிரைக் கடல்கடைந்து தெள்ளமுதில் வருந்
திருவை மார்பில் வைத்தரும் தேவெங்கள் பெருமாள் !
வண்டணியு மகிழ்மாற னெண்ட மிழினிசை கொண்டு
வரியரவிலே துயிலும் மணவாளப் பெருமாள் !
கொண்டல் தவழ் சோலை சூழ் கோயில் வாழும் நம்பெருமாள்
தெய்வ சிகாமணி !

என்றிப்படி கட்டியங்கள் ஸேவிக்கு மழகு மிக வற்புதம்! மிகமிக வற்புதம்!! மேலே குறித்த விதமாகப் பெரிய வாக்கியங்கள் ஸேவிப்பது தவிர, சிறு துணுக்கைகளாக ஸேவிப்பதும் வெகு ரஸ்யமாயிருக்கும்.

பொய்கையார்பரவும் பெருமாள் ! பூதத்தார் போற்றும் பெருமாள் !
பேயாழ்வார் பாடும்பெருமாள் ! பத்திசாரரேத்தும் பெருமாள் !
பராங்குசன் பணியும் பெருமாள் ! போதமிகு குலசேகர னேத்தும் பெருமாள் !
பட்டர்பிரான் பரவும் பெருமாள் ! பட்டன்கோதையேத்தும் பெருமாள் !
பத்தரடிப் பொடி பாடும் பெருமாள் ! பாணனர் பரவியேத்தும் பெருமாள் !
பரகாலன் பொங்கிப் போற்றும் பெருமாள் ! பதின்மர் பாடும் பெருமாள் !

என்றிப்படி பகர முதலதாக வைத்து ஏத்தும்போது கேட்கச் செவியாயிரம் வேண்டும்.

முற்காலத்தில் அரையர்களிலே யொருவர் திருமலைக்கு எழுந்தருளினாராம். அப்போது அங்கு எழுந்தருளியிருந்த பெரிய சிறிய ஜீயர் ஸ்வாமிகள் அரையரை அநுவர்த்தித்து 'எங்கள் அப்பனையும் சற்றுப் பாடவல்லீரோ?' என்று வேண்ட, உடனே அரையர் அதற்கென்ன குறை? என்று சொல்லிக் கட்டியம் கூறத் தொடங்கி "பதின்மர் பாடும் பெருமாள் ! பாவங்கள் தீர்க்கும் பெருமாள் !" என்று ஏத்தப்புக, அது கேட்ட ஜீயர் ஸ்வாமிகள் "பதின்மர் பாடும் பாக்கியம் எங்கள் அப்பனுக்கு இல்லையே, சோழியன் கெடுத்தானே" என்றூர்களாம். சோழியன் என்றது தொண்டரடிப்பொடி யாழ்வாரை; அவர் அரங்கமாநகருளானை யன்றி வேறு எத்தலத்துப் பெருமானையும் பாடினாரல்லர், "அண்டர் கோனணியரங்கனென்ன முதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே" என்று விரதம் காட்டிய திருப்பாணாழ்வாருங்கூட "விரையார் பொழில் வேங்கடவன்" என்றும் "மந்திபாய் வட வேங்கடமாமலை, வானவர்கள் சந்தி செய்ய நின்றான்" என்றும் திருவேங்கடமுடையானைப் பாடினர். தொண்டரடிப்பொடிகள் ஒருவர் மட்டும் திருவேங்கடவனைப் பாடிற்றிலர். ஆகவே "பதின்மர் பாடும் பெருமாள்" என்பது அரங்கநாதனுக்கே அஸாதாரணமாயிற்று. இனி, பொய்கை யாழ்வார் முதல் திருமங்கையாழ்வாரளவும் ஒவ்வோராழ் வாரையுமெடுத்துக் கொண்டு ஒவ்வொருவருடையவும் ஒவ்வொரு பாசுரத்தை மட்டுங்கொண்டு அரங்கனை யநுபவிப்போம்.

1. பொய்கையார் ; முதல்திருவந்தாதி. (பா. 6.) [* ஒன்று மறந்தறியேன் *]
" அன்று கருவரங்கத்துட் கிடந்து கைதொழுதேன் கண்டேன், திருவரங்கமேயான்

திசை''=அறிவு நடை யாடுகைக்கு யோக்யதையே யில்லாத காலத்திலே கருக் குழியிலிருந்துகொண்டே திருவரங்கத்திற் பள்ளிகொள்ளும் பெரிய பெருமாளுடைய படிகளை யெல்லாம் ஸாக்ஷாத்கரித்தவனாய் திசைநோக்கித் தொழுவதுமானேன் என்கை. இதன் கருத்தாவது, நான் கர்ப்பவாஸம் செய்யும்போதே பிடித்துத் திருவரங்கத் தரவணையிற் பள்ளிகொள்ளும் பெருமாளால் நிர்ஹேதுகமாகக் கடாக்ஷிக்கப்பெற்று; தன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதி சேஷ்டிதங்களை யெல்லாம் அவன் தானே விசத விசததர விசததமமாகக் காட்டிக்கொடுக்கக் கண்டு "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதநः, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தகः" [கருவிலே திருமாலால் கடாக்ஷிக்கப் பெறுபவன் எவனோ அவனே முமுக்ஷுவாவான்] என்கிறபடியே சுத்த ஸாத்விகனாய் அப்பெருமானுடைய திருக்கல்யாண குணம் முதலியவற்றை ஸ்வயம் அநுபவிப்பதும் பிறர்க்கு எடுத்து உபதேசிப்பதுமாக இவற்றையே காலக்ஷேபமாகக் கொண்டிருக்கின்றேனென்று திருவரங்கநாதனுடைய பெருமையையும் தம்முடைய பெருமையையும் கூறினாராயிற்று. முதலாழ்வார்கள் மூவரும் அயோநிஜர்களென்று ப்ரஸித்தர். இவர்களுக்கு கர்ப்பவாஸப்ரஸக்தியே கிடையாது; அப்படியிருக்க "அன்று கருவரங்கத்துள் கிடந்து" என்று எங்ஙனே கூறினர்? அடுத்த பூதத்தாழ்வாரும் "அன்று கருக்கோட்டியுட் கிடந்து கைதொழுதேன் கண்டேன், திருக்கோட்டியெந்தை திறம்" என்றருளிச் செய்தனரே; இவை எங்ஙனே பொருந்தும்? என்று சங்கை தோன்றுமிங்கு. கேண்மின்; "தீண்டாவழும்புஞ் செந்நீரும் சீயு நரம்பும் செறி தசையுமாய் வேண்டா நாற்றம்'' மிக்கிருக்கிற கர்ப்பத் தும்பையில் நின்றும் ஆழ்வார் பிறந்தாரென்று கொள்ள வேண்டிய அவசியமில்லை. எவ்விடத்தில் நின்று அவதரித்தாரோ அவ்விடமே கர்ப்பஸ்தானமாகும். இவ்வாழ்வாருடைய வாழித் திருநாமத்தில் "வனசமலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே'' என்றிருப்பதும் இவ்வர்த்தத்தை வற்புறுத்தும். 'நான் இவ்விருள் தருமா ஞாலத்தில் வந்து தோன்றுவதற்கு முன்னமே பெரிய பெருமாளுடைய கடாக்ஷம் பெற்றவன்' என்று கூறுவதேயாயிற்று இங்கு விவக்ஷிதம். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் பொய்கையாழ்வாருடைய திருவந்தாதியே முதற் பிரபந்தம்; அதனில் முதன் முதலாகப் பாடப்பெற்ற தலம் திருவரங்கமே என்பது இங்குக் குறிக்கொள்ளத்தக்கது.

2. பூதத்தாழ்வார்; இரண்டாந் திருவந்தாதி. (பா. 28.) *மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான், மற்றும் நினைப்பரிய நீளரங்கத்துள்ளான்* அரங்கத்துள்ளானை நினைக்கும்போதே "நினைப்பரிய'' என்று விசேஷணமிடுகிறார். இவ்விசேஷணம் அரங்கத்திலும் சேரும், அரங்கத்துள்ளானிலும் சேரும். திருவரங்கத்தை நினைப்போமென்று தொடங்கினால், * கங்கையிற் புனிதமாய காவிரியை நினைப்பதா? *ஆராமஞ் சூழ்ந்தவரங்கம் * என்னும்படியான வண்டினமுரலுஞ்சோலை மயிலின மாலுஞ் சோலை கொண்டல் மீதணவுஞ் சோலை குயிலினங்கூவுஞ் சோலைகளை நினைப்பதா? ஸப்தப்ராகாரத் திருவீதி கோபுர மண்டபாதிகளை நினைப்பதா? * அஜஸ்ர ஸஹஸ்ர தீதிஸேகோத்ததிவ்யநிஜ ஸௌரபமான திருப்புன்னையை நினைப்பதா? ஸ்ரீதிவ்ய மாணிக்ய பூஷாமஞ்ஜூஷாயாஸ் துல்யமான ஸ்ரீரங்காந்தர்மந்திரத்தை நினைப்பதா! என்று தோன்றுமே எதையும் நினைக்க முடியாதபடியே கிடக்கும். இனி அரங்கத்துள்ளானை நினைப்போமென்று தொடங்கினாலோ 'நினைப்பரியன்' என்று நினைக்கலாமத்தனை.


3. பேயாழ்வார்; மூன்றாந் திருவந்தாதி. (62) * விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர் வேங்கடம்....தேனார் திருவரங்கம். * தேனார் திருவரங்க மென்பதற்குத் தேன் பொருந்திய திருவரங்கம் என்று பொருள். தேன் எங்குள்ளது? என்று கேட்டால் திருவரங்கச் சோலைகளிலுள்ளது என்னலாம். திருவரங்கத்தின் கர்ப்பக்ருஹத்திலேயே யுள்ளது என்னப் பொருந்தும். திருமங்கையாழ்வார் "உளங்கனிந்திருக்கு

மடியவர் தங்கள் உள்ளத்துளூறிய தேன்" என்று எம்பெருமானையே தேனாக வருளிச் செய்தார். வேதாந்தத்தில் மது வித்யையில் அஸௌ வா ஆதித்யோ தேவமது" என்று எம்பெருமானையே மதுவாக வோதிற்று. * எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே * என்று அநுபவரஸிகர்கள் எம்பெருமானையேயாயிற்றுத் தேனாக வநுபவிப்பது. அப்படிப்பட்ட தேனார் திருவரங்கமென்க.

4. திருமழிசைப்பிரான்; நான்முகன் திருவந்தாதி (3) * பாலிற்கிடந்ததுவும் பண்ட ரங்கம் மேயதுவும்........யான றிந்தவாறு ஆரறிவார்? * = திருவரங்கம் பெரிய கோயி லில் உபயகாவேரீ மத்யத்தில் "பொன்னி சூழரங்கமேய பூவைவண்ண! மாய!" என்று அவனுடைய வடிவழகிலும் ஆச்சரிய குணசேஷ்டிதங்களிலும் ஈடுபட்டு 'இஃது என்ன போக்யதை! இஃது என்ன ஸௌலப்யம்!' என்று வாய் வெருவு கின்றவன் நானொருவனேயன்றி வேறு யாருமிலர் என்கை. இத்தால் முந்தின முதலாழ்வார்களின் ஈடுபாட்டை இல்லை செய்வதன்று; தம்முடைய ஈடுபாட்டின் கனத்தை மட்டும் தெரிவித்தவாறு. ஆசார்யஹ்ருதயத்தில் 'உறையிலிடாதவர்' என்று இவ்வாழ்வார்க்கு வ்யபதேசமிட்டருளினர். எம்பெருமானுடைய பரத்வஸ் தாபனத்திற்காக உருவினவாளை உறையிலிடாதவர் என்பது அதன் பொருள். அப்படி இவ்வாழ்வார் ஸ்தாபிக்கத் தொடங்கின பரத்வம் திருச்சந்த விருத்தத்தில் * காணிலு முருப்பொலார் * குந்தமோடு சூலம் வேற்கள் * வண்டுலாவு கோதை மாதர் * என்னும் பாசுரங்களில் வீறு பெற்றிருக்கின்றது. அதைப் பேசத் தொடங் கியது திருவரங்கத்திலேயாயிற்று. "மோடியோடிலச்சையாய சாபமெய்தி முக் கணன், கூடுசேனை மக்களோடு கொண்டு மண்டி வெஞ்சமத்தோட, வாணனாயிரங் கரங்கழித்த வாதிமால். பீடு கோயில் கூடுநீர் அரங்கமென்ற பேரதே" என்கிற (திருச்சந்த விருத்தப்) பாசுரத்தை யநுஸந்திப்பது.

5. நம்மாழ்வார்; திருவிருத்தம். (28) * தண்ணந்துழாய் வளைகொள்வது....வள் வாயலகால் புள் நந்துழாமே பொருநீர்த் திருவரங்காவருளாய் * இது வொரு சமத் காரமான வருணனை. திருவரங்கத்தில் திருக்காவேரியின்கரையில் நத்தையென்கிற ஜந்து கிடக்க, அதனைச் சில பறவைகள் கூர்மையான வாயலகால் கொத்திக் கிளறிக்கொண்டிருக்க, அதனால் அந்த நத்தை துன்புறுவதைக் கண்ட திருக்காவேரி 'நம்மை யடுத்ததொரு பிராணி இங்ஙனே துன்புற்றிருக்க நாம் கண்டு கொண்டிருக் கத் தகுமோ?' என்றெண்ணி உடனே அலைவரிசையைக் கரைமீது பரப்பி அந்த நத்தையைத் தன்னுள்ளே யிழுத்துக் கொண்டு உயிர்ப்பிச்சையளித்துக் காப்பாற்று வதாகக் கூறப்பட்டதிங்கு. காவிரிநீர் அலைமோதுவது இயற்கையாயினும் அதற்கொரு காரணம் கற்பித்ததனால் இங்குப் பெறுவிக்கப் படும் பொருள் யாதெனில்; திருவரங்கநாதனே! உன்னுடைய நாட்டுக்கு உறுப்பான தண்ணீரும் தன்னை யடைந்த பொருளை எதிரி கவர்ந்து நலிவு படுத்தாதபடி திரைக்கையாற் பொருது காத்திடுகின்றதே; உனக்கு மட்டும் அது இயல்பாகாதோ? அடுத்தாரை ரக்ஷிக்குந் தன்மை அசேதநத்திற்கே யிருக்கும்போது பரமசேதநனான வுனக்கு அது மிகவும் இருக்க வேண்டாவோ? எனக்குறிப்பித்தபடி.

6. குலசேகராழ்வார்; பெருமாள் திருமொழி. இவ் வாழ்வார்க்குத் திருவரங்கம் பெரிய கோயிலிலுள்ள ஈடுபாட்டைப்பற்றிப் பேசத்தானவேதுண்டோ? "குஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா திநேதிநே, தமஹம் சிரஸா வந்தே ராஜாநம் குலசேகரம்." என்று ப்ரஸித்தமான இவருடைய தனியனை நினைப்பூட்டுவதொன்றே போதுமே. பெருமாள் திருமொழியில் முதலிட்டு மூன்று பதிகங்களினால் பெரிய பெருமாளையும் திருவரங்கத்தையும் ஸ்ரீரங்கநாத பக்தர்களையும் இவ்வாழ்வார் அநுபவிக்குந் திறன் ஈடுமெடுப்பு மில்லாதது. ஒரே பாசுர மனுபவிப்போமிங்கு. முதற்பதிகத்தில் இரண்டாம் பாட்டில் "கடியரங்கத் தரவணையிற் பள்ளிகொள்ளும்




சுபக்ருத்ஸூ மார்கழி முப்பதும் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி
ஸன்னிதியில் திருப்பாவை கோஷ்டியின் காட்சி

மாயோனை மணத்தூணே பற்றிநின்று என் வாயார வென்று கொலோ வாழ்த்து நாளே!" என்றருளியது அநுபவ ரஸிகர்களுக்கு அற்புதமானது. அழகிய மணவாளன் ஸன்னிதியில் கர்ப்பக்ருஹத்தண்டையிலிருக்கும் இரண்டு தூண்களுக்குத் திருமணத்தூண் என்பது ஸம்ப்ரதாயத் திருநாமம்.

இதனை பட்டர் வடமொழியில் ஆமோதஸ்தம்ப மென்று மொழிபெயர்த்தருளினர். ஆமோதமாவது பரிமளம். மண மென்பது மதுவே. வேதாந்தங்களில் "ஸர்வ கந்தঃ" என்னப்பட்ட எம்பெருமானுடைய ஸௌகந்த்யம் இரு தூணை வடிவெடுத்ததுபோலும். 'மணத்தூணருகில் நின்றுகொண்டு' என்னுமல் 'மணத்தூணே பற்றி நின்று' என்றதன் மருமமான கருத்தை ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் வெளியிட்டருளினர். எங்ஙனேயென்னில்; "சேஷசய லோசநாம்ருத நதீரயா குலித லோலமாநாநாம், ஆலம்ப மிவாமோத ஸ்தம்பத்வய மந்தரங்கமபியாமঃ இந்த ச்லோகத்தின் கருத்து;—அழகிய மணவாளனுடைய திருக்கண்ணோக்கமாகிற அமுத வாற்றின் பெரு வெள்ளமானது அநுபவிக்க இழிந்தவர்களை ஒருமித்து நிலைநின்று அநுபவிக்கவொட்டாமல் தாக்கித்தள்ளி அசைக்குமளவில், அவர்கள் கைப்பிடிப்பாகப் பற்றிக்கொண்டு நிற்பதற்கு நாட்டப்பட்ட தூண்களாமிவை. ஆலங்காரிக ஸமயத்தின்படி உத்ப்ரேக்ஷா வ்யஞ்ஜகமான இவசப்தம் இங்கு பிரயோகிக்கப்பட்டிருக்கையாலே இது உத்ப்ரேக்ஷித்தபடியேயல்லது தத்வார்த்த ப்ரதிபாதனமன்றேயென்று சிலர் நினைக்கக்கூடும். அங்ஙனமன்று; "சிமிவ ஹி மதுராணும்" இத்தியாதி ஸ்தலங்களிற் போல இங்கும் இவகாரம் வாக்யாலங்காரமாகவே கொள்ளத்தகும். உத்ப்ரேக்ஷயாகக் கொண்டாலும் குறையில்லை. "பற்றி நின்று" என்றருளிச்செய்த ஆழ்வாருடைய திருவுள்ளம் இங்ஙனே யிருக்கக்கூடுமென்று உல்லேகித்து அருளிச்செய்ததாகக் கொண்டாலும் குறையில்லை. இவ்வாழ்வாருடைய அநுபவத்தில் "வன்பெரு வானகமுய்ய அமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய, துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ, அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளிகொள்ளு மணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள், இன்ப மிகு பெருங்குழுவு கண்டு யானு மிசைந்துடனே யென்றுகொலோ இருக்கு நாளே!" என்னும் பாசுரத்தினுற் செய்த மாநஸாநுபவம் மிகவிலக்ஷணமானது. விண்ணவர்களும் மண்ணவர்களும் விலக்ஷண ஸ்ரீவைஷ்ணவர்களும் வாழவும் பாவங்கள் நீங்கிப் புண்ணியங்கள் செழிக்கவுமாகக் குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டித் தென்திசை யிலங்கை நோக்கிப் பள்ளி கொண்டருளாநின்ற பெரியபெருமாள் ஸன்னிதித் திருமுற்றத்திலே திளைக்கின்ற பாகவதர்களின் திரளிலே சேர்ந்து அடியேனும் திளைத்து வாழப்பெறுவது என்றோவென்று தம்முடைய பாரிப்பை விளங்கக் காட்டினர்.

7. **பெரியாழ்வாரும் திருமொழியும்:** திருவரங்கம் பெரிய கோயிலை யநுபவிக்கும் பதிகங்கள் மூன்று பணித்தும் பல துணுக்கைப் பாசுரங்கள் பணித்தும் போந்த இவ்வாழ்வார் அதிமாநுஷசேஷ்டிதங்களையும் சில அபூர்வ இதிஹாஸங்களையும் ஸ்ரீரங்கநாதன் பக்கலிலே அநுஸந்திக்கும்படியைக் காணநின்றோம். சிலவற்றை யெடுத்துக் காட்டுகிறோமிங்கு. "சீமாலிக னவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீயெண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய்" என்கிற அபூர்வ கதையை ஸ்ரீரங்கநாதன் பக்கலிலேயே அநுஸந்தித்தாரென்னுமிடம் "ஆமாறறியும் பிரானே! அணியரங்கத்தே கிடந்தாய்!" என்கிற மூன்றாமடியினுல் விளங்காநின்றது. "ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய் அவனியாய் அருவரைகளாய், நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த் தானுமானான்" என்கிற [ஹரிவம்ச ப்ரஸித்தமான] அபூர்வகதையையும் "சேமமுடை நாரதனார் சென்று சென்று துதித்திறைஞ்சக்கிடந்தான் கோயில்....புனலரங்கமே" என்று ஸ்ரீரங்கநாதன் திறத்



சுபக்ருத்ஹு மார்கழி முப்பதும் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி
ஸன்னிதியில் திருப்பாவை கோஷ்டியின் காட்சி

திலேயே அநுஸந்தித்தாராயிற்று. *மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தது, *பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும் இறைப்பொழுதில் கொணர்ந்து கொடுத்தது,* மருமகன்றன் சந்ததியை உயிர்மீட்டது ஆகிய அதிமாநுஷகதைகள் மூன்றையும் திருவரங்கத் திருமொழியிலேயே பேசிவைத்தார்.

ஆண்டாளும் திருமொழியும்: நாச்சியார் திருமொழியில் *தாமுகக்கும் தங்கையில்* என்னும் பதிகத்திற் காணும் ஆண்டாளுடைய அநுபவம் வேறெங்குங் காணக் கிடைக்க மாட்டாதது. அரங்கனுடைய வடிவழகு, பரத்வம், ஸௌலப்யம், ஸௌசீல்யம், ப்ரணயித்வம் மூதலான முக்கியமான திருக்குணங்களெல்லாம் இத்திருமொழியில் அநுபவிக்கப்படுகின்றன. "என்னரங்கத்தின்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ழகர் கொப்பூழிலெழு கமலப்பூவழகர்" என்கிற பாசுரம் அழகிலேயீடுபட்டுப் பேசினது *பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான், செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்* என்னும் பாசுரம் பரத்வத்திலீடுபட்டுப் பேசினது "நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணை யான் இல்லாதோம் கைப்பொருளும் எய்துவானொத்துளனே" என்ற பாசுரம் ஸௌசீல்யத்திலீடுபட்டுப் பேசினது. *உண்ணாதுறங்காது* பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்கு, *கண்ணாலங்கோடித்த* என்கிற மூன்று பாசுரங்களும் ப்ரணயித்வத்திலீடுபட்டுப் பேசியவை.

8. **தொண்டரடிப் பொடியாழ்வாரும், திருமாலையும்:** "திருமாலையறியாதவன் திருமாலையறியான்" என்றொரு பழமொழியுண்டு. திருமாலையென்கிற திவ்வியப் பிரபந்தம் எவர்க்குத் தெரியாதோ அவர்க்குத் திருமால் தெரியாது என்பது பொருள். இதில் தள்ளத் தக்க பாசுரம் எது? கொள்ளத் தக்க பாசுரம் எது? என்று விபஜிக்க முடியுமோ? *மேம்பொருள் போகவிட்டுக்கு மேலிற் பாட்டுக்களைப் பரமஸாரமாகக் கொண்டது ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரம். இவ்வாழ்வார் தொண்டரடிப் பொடியென்று தாம் வஹித்த திருநாமத்திற்குச் சேர, தொண்டர்களின் பெருமையை நூல் வழி கடவாமே பேசின அவ்வைந்து பாசுரங்களும் அரங்கனடியார்க்கு அநவரதம் அநுஸந்தேயங்கள்.

9. **திருப்பாணாழ்வாரும், அமலனாதிபிரானும்:** இந்த மகுடத்தின்கீழ் நாம் என்ன பேசுவது? "காட்டவே கண்டபாத கமலம் நல்லாடை யுந்தி, தேட்டரு முதரபந்தம் திருமார்வு கண்டம் செவ்வாய், வாட்டமில் கண்கள் மேனி முனி யேறித் தனி புகுந்து, பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே." என்கிற தனியனை நினைந்து நைந்துள் கரைந்துருகி நிற்கிறோமத்தனை.

10. **திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியும்:** "பதியே பரவித்தொழும் தொண்டர்தமக்குக் கதியே" என்று தாமே அருளிச் செய்தபடி திருப்பதிகள் பலவற்றிலும் தட்டித் திரிந்த இவ்வாழ்வார் "அணியார் பொழில் சூழரங்க நகரப்பா! துணியேனினி நின்னருளல்லதெனக்கு" என்று தமது பெரிய திவ்யப்பிரபந்தத்தைத் தலைக்கட்டினராதலால் *வான் திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ் மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்* என்று திருவாய் மொழியாயிரத்திற்குக் கூறிய பெருமை திருமொழியாயிரத்திற்கும் ஒக்குமென்று கொள்ளக் குறையில்லை. ... ... *

பதின்மர் பாடும் பெருமாள் போற்றி!